முன்னுரை

முன்னுரை

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு இரண்டாவது நிருபத்தை எழுதுகிறார். இப்போது அவர் ரோமாபுரியில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஜீவனுக்கு மிகுந்த ஆபத்து உண்டாயிருக்கிறது. "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். நான் தேகத்தைவிட்டு பிரியும் காலம் வந்தது" (2தீமோ 4:6) என்று பவுல் தனக்கு மரணம் சமீபமாயிருப்பதை வெளிப்படுத்துகிறார்.

நீரோ இராயனுக்கு முன்பாக பவுல் அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டார். அதைப்பற்றிச் சொல்லும்போது, "நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில்" (2தீமோ 4:16) என்று குறிப்பிடுகிறார். நீரோ மன்னனுக்கு முன்பாக பவுல் நின்றபோது அவரோடுகூட ஒருவரும் இருக்கவில்லை. எல்லோரும் அவரை கைவிட்டுவிட்டார்கள். அப்போஸ்தலர் பவுல் பல நிருபங்களை எழுதியிருக்கிறார். அவையெல்லாவற்றிலும் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபமே அவர் கடைசியாக எழுதின நிருபம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பவுல் இந்த நிருபத்தை எழுதியபோது தீமோத்தேயு எங்கேயிருந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

1 அதிகாரம்

முன்னுரை (2தீமோ 1:1,2) தீமோத்தேயு மீது பவுல் வைத்திருக்கிற உண்மையான அன்பு (2தீமோ 1:3-5). பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லுகிற புத்திமதிகள் (2தீமோ 1:6-14). பிகெல்லு, எர்மொகெனே, ஒநேசிப்போரு ஆகியோரைப் பற்றி பவுல் எழுதுகிறார் (2தீமோ 1:15-18).

ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தம் 2தீமோ 1 : 1-5

2தீமோ 1:1. கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தத்தின்படி, தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்,

2தீமோ 1:2. பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2தீமோ 1:3. நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து,

2தீமோ 1:4. உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்.

2தீமோ 1:5. அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்.

சுவிசேஷம் இயேசுகிறிஸ்துவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தமாகும். ஜீவனே முடிவு. அதற்கு கிறிஸ்துவே வழி. தேவனுடைய சித்தத்தினாலே அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். மனுஷருடைய சித்தத்தினாலோ, மனுஷருடைய விருப்பத்தினாலோ பவுல் அப்போஸ்தலராக நியமிக்கப்படவில்லை. தேவனே பவுலை தம்முடைய அப்போஸ்தலனாக ஊழியம் செய்ய அழைத்திருக்கிறார் (2தீமோ 1:1).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோருக்குமே ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தம் உண்டு. இந்த வாக்குத்தத்தமும், மேலும் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற எல்லா வாக்குத் தத்தங்களும் கிறிஸ்து இயேசுவினால் நமக்கு உண்டாயிருக்கிறது. நமக்கு கிருபை, இரக்கம், சமாதானம் ஆகியவை தேவை. இவை பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் நமக்கு உண்டாகிறது (2தீமோ1:2).நம்முடைய சிநேகிதர்களுக்காக நாம் கர்த்தருடைய சமுகத்தில் ஏராளமான காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணலாம். அவர்களுக்கு கிருபையும் இரக்கமும் சமாதானமும் இயேசு கிறிஸ்துவினால் உண்டாக வேண்டும் என்று ஜெபிப்பதே மிகவும் ஆசீர்வாதமான ஜெபமாகயிருக்கும்.

தீமோத்தேயு விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் நிரம்பியிருக்கிறார். இதற்காக பவுல் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். பவுல் எப்போதுமே ஜெபித்துக் கொண்டிருக்கிறவர். அவர் இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபிக்கிறவர். தன்னுடைய ஜெபத்தில், அவர் தனக்காகவும், விசேஷமாக தன்னுடைய சிநேகிதர்களுக்காகவும் ஜெபிப்பது வழக்கம்.

பவுலுடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்கள் இப்போது கர்த்தருடைய ஊழியக்காரர்களாய் ஊழியம் செய்கிறார்கள். இதை நினைவுகூரும்போது பவுலுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. பவுல் சுத்தமனச்சாட்சியோடே தேவனை ஆராதித்து வருகிறார். தீமோத்தேயுவிடம் மாயமற்ற விசுவாசம் இருப்பதை நினைவுகூர்ந்து பவுல் தேவனை ஸ்தோத்திரம்பண்ணுகிறார் (2தீமோ 1:4).

பவுலும் தீமோத்தேயுவும் இப்போது பிரிந்திருக்கிறார்கள். பவுல் தீமோத்தேயுவை விட்டு பிரிந்தபோது, தீமோத்தேயு அந்தப் பிரிவை நினைத்து கண்ணீர் சிந்தினார். பவுல் தீமோத்தேயுவின் கண்ணீரை ஞாபகம் பண்ணி, அவரை சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு, அவரைக் காண வாஞ்சையாயிருக்கிறார். பவுல் தீமோத்தேயுவை மறுபடியும் பார்க்கும்போது தீமோத்தேயுவுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும். பவுலும் தீமோத்தேயுவும் அந்த அளவுக்கு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் பவுலின் முன்னோர்கள் சுத்த மனச்சாட்சியோடே தேவனை ஆராதித்து வந்தார்கள். அதே தேவனை பவுலும் ஆராதித்து வருகிறார். அந்த விசுவாசம் தீமோத்தேயுவின் முன்னோர்களிடத்தில் நிலைத்திருக்கிறது. முதலாவதாக தீமோத்தேயுவின் குடும்பத்தில் அவருடைய பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், அதன்பின்பு அவருடைய தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் கர்த்தரைப் பற்றும் விசுவாசம் நிலைத்திருந்தது. இப்போது அது தீமோத்தேயுவுக்குள்ளும் நிலைத்திருக்கிறது (2தீமோ 1:5).

பெற்றோர் பக்தியுள்ளவர்களாகயிருப்பது பிள்ளைகளுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். பக்தியுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஜெபத்தோடும் ஒழுக்கத்தோடும் வளர்ப்பார்கள். பிள்ளைகளும் விசுவாசத்தில் தங்கள் பெற்றோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நடைகளை கவனிப்பார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட நல்ல சிலாக்கியம் தீமோத்தேயுவுக்குக் கிடைத்திருக்கிறது.

நம்மிடத்திலுள்ள விசுவாசம் நிலைத்திருக்க வேண்டும். அது மங்கிப் போய்விடக் கூடாது. காணாமல்போய்விடக் கூடாது. நமக்குச் சோதனை வந்தாலும் நம்முடைய விசுவாசம் நிலைத்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவின் விசுவாசமும், அவருடைய பாட்டி, தாயார் ஆகியோரின் விசுவாசமும் நிலைத்திருப்பதைக் காண்கிறார். அதற்காக அவர் கர்த்தரைத் துதிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் 2தீமோ 1 : 6-10

2தீமோ 1:6. இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.

2தீமோ 1:7. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

2தீமோ 1:8. ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி.

2தீமோ 1:9. அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால்முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

2தீமோ 1:10. நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு ஊழியத்தைக் குறித்துப் புத்தி சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே நன்மையான காரியங்களை நினைவில் வைத்திருக்கவேண்டும். பல சமயங்களில் நம் எல்லோருக்குமே சில சம்பவங்களை நினைப்பூட்ட வேண்டியதாகயிருக்கிறது. நமக்கு உண்டான தேவவரத்தை நாம் அனல்மூட்டி எழுப்பிவிட வேண்டும். வரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக் கொண்ட வரங்களை விசுவாசத்தோடு பயன்படுத்தவேண்டும்.

நம்மிடத்திலுள்ள வரங்களை எல்லா சூழ்நிலைகளிலும் பயன்படுத்தவேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வரங்களை விசுவாசத்தோடு பயன்படுத்த வேண்டும். அப்போது, நம்மிடத்திலுள்ள தேவவரம் அனல்மூட்டி எழுப்பிவிடப்படும். வரம் பற்றியெரியும். நன்றாய்க் கிரியை செய்யும். பயத்தினாலோ, அல்லது அவிசுவாசத்தினாலோ நம்மிடத்திலுள்ள வரத்தை நாம் பயன்படுத்தாதிருப்போமென்றால், அந்த வரம் மங்கிப்போகும். முடிவில் செயலிழந்துபோகும்.

தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பி விடவில்லையென்றால், அது மங்கியெரிந்து, முடிவில் அணைந்து போவதற்கு வாய்ப்புள்ளது (2தீமோ 1:6). ஆகையினால் பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்திசொல்லும்போது, "நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்குண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" (2தீமோ 1:6) என்று சொல்லுகிறார்.

தேவன் நம்மை பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை பண்ணியிருக்கிறார். அவர் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடுக்கவில்லை. பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2தீமோ 1:7). வல்லமையின் ஆவியையும், நம்மைப் பெலப்படுத்துகிற ஆவியையும், தெளிந்த புத்தியோடு தீர்மானம் பண்ணுகிற ஆவியையும் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

தேவனிடத்தில் அன்புகூருகிற ஆவி நம்மிடத்திலிருக்கும்போது, மனுஷபயம் நம்மை விட்டு நீங்கிப்போகும். தெளிந்த புத்தியுள்ள ஆவியும், சமாதானமுள்ள ஆவியும் நம்மிடத்திலிருக்கும்போது நமக்கு நீடிய பொறுமையிருக்கும். ஒவ்வொரு காரியத்தையும் பதட்டப்படாமல் நிதானமாய்ச் சிந்தித்துச் செயல்படுவோம்.

பல சமயங்களில் நமக்கு நாமே எதையாவது கற்பனை பண்ணிக்கொண்டு பயந்துவிடுகிறோம். எதைப் பார்த்தாலும் நமக்கு பயம் வந்துவிடுகிறது. இப்படிப்பட்ட பயங்கள் ஊழியத்திற்குத் தடையாகயிருக்கிறது. நம்மிடத்தில் தெளிந்த புத்தியுள்ள ஆவியிருக்கும்போது, நம்முடைய மனது தெளிவாகச் சிந்திக்கும். பயம் நம்மைவிட்டு நீங்கும்.

சுவிசேஷத்திற்காக தன்னோடுகூட தீங்கு அநுபவிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்திசொல்லுகிறார். தீங்கு அநுபவிக்க கர்த்தருடைய பிள்ளைகள் வெட்கப்படக்கூடாது. அதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படக் கூடாது. தேவவல்லமைக்கு ஏற்றபடி, சுவிசேஷத்திற்காக, நாம் தீங்கு அநுபவிக்க வெட்கப்படாமல் ஆயத்தமாயிருக்க வேண்டும் (2தீமோ 1:8).

ஒருசிலர் சுவிசேஷத்திற்காக பாடுகளையும், வேதனைகளையும், தீங்குகளையும் அநுபவிக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நாம் வெட்கப்படக் கூடாது. பவுல் சுவிசேஷத்தினிமித்தமாய் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். அவருடைய கட்டுக்களைப் பார்த்து தீமோத்தேயு வெட்கப்படவில்லை. சுவிசேஷம் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சி. சுவிசேஷத்தினிமித்தமாய் நாம் கட்டப்பட்டிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். பவுல் கர்த்தரைப்பற்றிய சாட்சியை அறிவித்ததினால், இப்போது கட்டப்பட்டிருக்கிறார். தன்னுடைய கட்டுக்கள் மூலமாயும் பவுல் கர்த்தரைப்பற்றி சாட்சியாய் அறிவிக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோரும் கர்த்தரைப்பற்றிய சாட்சியை அறிவிக்கவேண்டும். அவருக்குச் சாட்சியாக ஜீவிக்கவேண்டும். சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலமாய் எப்படிப்பட்ட பாடுகள் வந்தாலும், பயந்துவிடாமல், தேவவல்லமைக்கேற்றபடி, சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். கிறிஸ்துவினிமித்தம் தீங்கு அநுபவிக்க வேண்டியது வந்தாலும், தேவவல்லமைக் கேற்றபடி நாம் தீங்கு அநுபவிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவினிமித்தம் அவரை சங்கிலிகளால் கட்டியிருக்கிறார்கள். நாம் கிறிஸ்துவைக்குறித்தோ அல்லது அவருடைய சுவிசேஷத்தைக் குறித்தோ வெட்கப்பட்டால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்மைக் குறித்து வெட்கப்படுவார். நாம் கர்த்தருடைய ஊழியத்தை வெட்கப்படாமல் செய்ய வேண்டும். சுவிசேஷத்தை வெட்கப்படாமல் அறிவிக்க வேண்டும். சுவிசேஷத்திற்காக வெட்கப்படாமல் தீங்கு அநுபவிக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சுவிசேஷத்தை நமக்குக் கொடுத்து நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். சுவிசேஷம் மகிமையானது. கர்த்தர் நம்முடைய இரட்சிப்புக்காகவே சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார். சுவிசேஷத்தினால் நமக்கு இரட்சிப்பு உண்டாகும் என்று விசுவாசிக்கிறோம். அதே சுவிசேஷத்தினால் நாம் தீங்கு அநுபவிக்க வேண்டுமென்று பயந்துவிடக்கூடாது. நாம் தீங்கு அநுபவிக்கவேண்டுமென்பதற்காக கர்த்தர் நமக்கு சுவிசேஷத்தைக் கொடுக்கவில்லை. நம்மை இரட்சிக்க வேண்டுமென்பதற்காகவும், நம்மைப் நமக்கு பரிசுத்தப்படுத்த வேண்டுமென்பதற்காகவும் கர்த்தர் நமக்கு சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறவர்களெல்லோரும், அவரைப் பற்றும் விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் சுவிசேஷத்தின் அழைப்பு பரிசுத்த அழைப்பு. தேவன் தாமே நம்மை இரட்சித்து, தம்முடைய பரிசுத்த அழைப்பினாலே அழைத்திருக்கிறார் (2தீமோ 1:9).

கர்த்தர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்கவில்லை. தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் அவர் நம்மை இரட்சித்திருக்கிறார். நம்முடைய இரட்சிப்புக்கு ஆரம்பம் தேவனுடைய இலவசமான கிருபை. தேவனுடைய நித்திய நோக்கம் இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் கொடுக்கிற இரட்சிப்பை நம்முடைய கிரியைகளினால் சம்பாதிக்க முடியாது. நம்முடைய இரட்சிப்புக்காக நம்மால் எந்தக் கிரயத்தையும் செலுத்த முடியாது.

தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை இலவசமாக இரட்சித்திருக்கிறார். ஆகையினால் நம்முடைய இரட்சிப்புக்காக நாம் எந்தக் கிரியையையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு கிருபை அருளப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாய், பாவமான மனுஷன், தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறான். இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்துவதே சுவிசேஷத்தின் நோக்கம். சுவிசேஷத்தின் மூலமாய் தேவனுடைய கிருபையும், தேவனுடைய இரட்சிப்பின் திட்டமும் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய இரட்சிப்புக்காக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏற்கெனவே பாடுகளை அநுபவித்திருக்கிறார். நம்மை மீட்பதற்காக தம்முடைய இரத்தத்தையே அவர் மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு செலுத்த வேண்டிய கிரயத்தை இயேசுகிறிஸ்து செலுத்தித் தீர்த்துவிட்டார். இனிமேலும் கிரயம் செலுத்த வேண்டியது ஒன்றுமில்லை. ஆகையினால் நம்முடைய இரட்சிப்புக்கு நாம் பாடுகளை அநுபவிக்க வேண்டுமென்றோ, நம்முடைய பாவத்திற்குப் பிராயசித்தமாக ஏதாவது கிரயம் செலுத்த வேண்டுமென்றோ தேவையில்லை.

இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே தேவனுடைய கிருபை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் மரணத்தைப் பரிகரித்திருக்கிறது. ஒரு காலத்தில் மரணம் நமக்கு சத்துருவாகயிருந்தது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாய், அந்த மரணம் இப்போது நமக்கு சிநேகிதனாகயிருக்கிறது. பரலோகம் சமாதானமும் பரிசுத்தமும் நிறைந்த உலகம். இப்பிரபஞ்சமோ பாவமும், துன்மார்க்கமும் நிறைந்த உலகம்.

இந்தப்பிரபஞ்சத்திலிருந்து பரலோகத்திற்குப் போவதற்கு, நம்முடைய சரீர மரணமே ஒரு வாசலாகயிருக்கிறது. இந்த வாசலைக் கடந்துதான் கர்த்தருடைய பிள்ளைகள் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியும். இதுவரையிலும் ஜனங்கள் மரணத்தின் வாசலைக் கடப்பதற்குப் பயந்தார்கள். சுவிசேஷத்தின் மூலமாய் தேவனுடைய கிருபையும், பரலோகத்தில் நித்திய ஜீவனும் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருப்பதினால், நம்முடைய சரீர மரணத்தின் வாசலைக் கடப்பதற்கு நாம் ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிறோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்தார். மரணத்தை ஜெயித்தார். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசிக்கிறவர்கள் மரணத்தை ஜெயிப்பார்கள். மரணம் அவர்களை ஆளுகை செய்யாது. இயேசு கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்க மாக்கியிருக்கிறார் (2தீமோ 1:10).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கிருபையை நாம் ஒரு காட்சிப்பொருளாகப் பார்த்து ரசிப்பதற்காக இது வெளிப்படுத்தப்படவில்லை. சுவிசேஷத்தின் மூலமாய் இந்தக் கிருபை நமக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபையினாலே நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது. கிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய மரணம் பரிகரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே நாம் ஜீவனையும் அழியாமையையும் பெற்றுக்கொள்கிறோம்.

பாடுகளை அநுபவிக்கிறேன்
2தீமோ 1: 11,12

2தீமோ 1:11. அதற்கு நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன்.

2தீமோ 1:12. அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார் (2தீமோ 1:11). சுவிசேஷத்தினிமித்தமாய் பாடுகளை அநுபவிப்பதை பவுல் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார். தன்னைப்போலவே தீமோத்தேயுவும் சுவிசேஷத்திற்காக தீங்கு அநுபவிக்க வேண்டுமென்று புத்திசொல்லுகிறார். சுவிசேஷத்திற்காக பாடுஅநுபவிக்க ஊழியக்காரர்கள் வெட்கப்படக்கூடாது.

சுவிசேஷத்தினிமித்தம் பவுல் இந்தப் பாடுகளை அநுபவிக்கிறார். ஆயினும் அவர் வெட்கப்படுகிறதில்லை(2தீமோ 1:12). இப்பிரபஞ்சத்தில் ஏராளமான நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களுக்காக பாடுகளை அநுபவிக்கிறார்கள். அதற்காக பாடுகளை அநுபவிக்க அவர்கள் வெட்கப்படுவதில்லை.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமோ, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக பாடுகளை அநுபவிக்க ஒருபோதும் வெட்கப்படக் கூடாது. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், தாங்கள் விசுவாசத்திருக்கிறவர் இன்னரென்று அறிந்திருக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவினிடத்தில் எதை ஒப்புக்கொடுத்திருக்கிறோம் என்பதையும் அறிந்திருக்கவேண்டும். நம்முடைய ஆத்தும இரட்சிப்பை கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறோம். நாம் கிறிஸ்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்திருக்கிற நம்முடைய ஆத்தும இரட்சிப்பை, அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று, நாம் நிச்சயத்தோடிருக்க வேண்டும். நாம் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் காத்துக்கொள்வார்.

நம்முடைய ஆத்துமாவைப் பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டிய ஒரு நாள் வரப்போகிறது. அந்தநாளில் நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படுவோம். நியாயத்தீர்ப்பு நாளின்போது நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய ஆத்தும இரட்சிப்பு நம்முடைய பொறுப்பிலிருக்குமென்றால் அதை நாம் இழந்து விடுவோம். ஆகையினால் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய ஆத்தும இரட்சிப்பை, இரட்சராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்துவிடவேண்டும்.

நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும், நம்முடைய இரட்சகர் நம்முடைய ஆத்தும இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயத்தோடிருக்க வேண்டும். நம்முடைய நியாயத்தீர்ப்பு நாளின்போது, நம்முடைய ஆத்தும இரட்சிப்பு, நம்முடைய கர்த்தருடைய கரத்தில் பாதுகாப்பாக இருக்கும். அவர் அதைப் பாதுகாத்துக் கொள்வார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் விசுவாசித்திருக்கிறவர் இன்னரென்று அறிந்திருக்க வேண்டும். நம்முடைய இரட்சிப்பை விசுவாசத்தோடு கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை, அவர் காத்துக்கொள்வார் என்று நாம் நிச்சயித்திருக்கவேண்டும்.

பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்
2தீமோ 1 : 13,14

2தீமோ 1:13. நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு.

2தீமோ 1:14. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்.

தீமோத்தேயு ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிருக்க வேண்டும். எல்லா தேவதூஷணங்களுக்கும், துர்உபதேசங்களுக்கும் விரோதமாக தேவவசனங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். தேவவசனங்களை எவ்வாறு காத்துக்கொள்வது என்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார். நாம் அவற்றை கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் காத்துக் கொள்ளவேண்டும். விசுவாசமும் அன்பும் இணைந்து கிரியை நடப்பிக்கவேண்டும்.

நாம் ஆரோக்கியமான வசனங்களைக் கேட்டால் மாத்திரம் போதாது. அவற்றை விசுவாசித்தால் மாத்திரம் போதாது. நாம் அவற்றை நேசிக்கவும் வேண்டும். நாம் வசனங்களின் சத்தியத்தை விசுவாசித்து, அவற்றின் நன்மைகளை நேசிக்க வேண்டும். விசுவாசமும் அன்பும் நம்மிடத்தில் இணைந்திருக்கவேண்டும்.

தீமோத்தேயு அப்போஸ்தலர் பவுலிடத்தில் ஆரோக்கியமான வசனங்களைக் கேட்டிருக்கிறார். தேவனுடைய வார்த்தையில் சுகமளிக்கும் வல்லமையுள்ளது. ஆகையினால் கர்த்தருடைய வசனங்கள் ஆரோக்கியமான வசனங்கள் என்று அழைக்கப்படுகிறது. ஆரோக்கியமான வசனங்கள் நமக்கு நற்பொருளாகயிருக்கிறது.

கிறிஸ்தவ உபதேசம் தீமோத்தேயுவிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. தீமோத்தேயு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட போதும், ஊழியத்திற்கு அவரை பிரதிஷ்டை பண்ணிய போதும், கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்கள் அவரிடத்தில் நற்பொருளாக ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நற்பொருளை அவர் காத்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்மிடத்திலும் கிறிஸ்துவின் உபதேசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை விலையேறப்பெற்றது. இது ஒரு நற்பொருள். இதனால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏராளமாய்ப் பெருகும். கிறிஸ்துவின் உபதேசத்தை நாம் காத்துக்கொள்ளவேண்டுமென்பதற்காகவே, அது நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது ஆரோக்கியமான வசனங்களை பரிசுத்தத்தோடும், பூரணமாகவும் காத்துக்கொள்ளவேண்டும் (1தீமோ 1:14).

தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்திருக்கிற தம்முடைய ஆரோக்கியமான வசனங்களை, நமக்குப் பின்வரும் சந்ததியாரிடம் நாம் ஒப்புவிக்கவேண்டும். நாம் எவ்வளவுதான் கற்றாலும் அது நமக்குப் போதுமானதல்ல. நாம் கற்றுக்கொண்டது எல்லாவற்றையும் நம்முடைய நினைவில் வைத்திருக்க நம்மால் முடியாது. நாம் கற்றுக்கொண்ட எல்லா பாடங்களையும் நம்மால் காத்துக்கொள்ளவும் முடியாது.

நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை காத்துக்கொள்வதற்கு நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவைப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார். நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட, ஆரோக்கியமான வசனங்களாகிய நற்பொருளை, நமக்குள்ளே வாசம்பண்ணுகிற, பரிசுத்த ஆவியினாலே நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்திருக்கிற நற்பொருளை, நம்மால் காத்துக்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. பரிசுத்த ஆவியினாலே நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளை காத்துக்கொள்ளவேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுவதினாலும், அவர் நமக்கு உதவிபுரிவதினாலும், நம்முடைய முயற்சி தேவையில்லையென்று நினைத்து சும்மாயிருந்துவிடக் கூடாது. நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளை நாம்தான் காத்துக்கொள்ள வேண்டும். அந்த நற்பொருளை நாம் பரிசுத்தஆவியினாலே காத்துக்கொள்ளவேண்டும். அதை பரிசுத்த ஆவியானவர் காத்துக்கொள்ளமாட்டார்.

நற்பொருளை நாம்தான் காத்துக் கொள்ள வேண்டும். நாம் நற்பொருளைக் காத்துக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிபுரிவார். பரிசுத்த ஆவியானவரின் உதவியையும் நம்முடைய முயற்சியையும் வெவ்வேறாகப் பிரித்து வைக்கக்கூடாது. இவை இரண்டும் இணைந்து கிரியை நடப்பிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரும் நமக்குள்தான் வாசம் பண்ணுகிறார். நம்முடைய முயற்சியும் நமக்குள்ளிருந்து தான் கிரியை செய்கிறது.

என்னைவிட்டு விலகினார்கள்
2தீமோ 1 : 15-18

2தீமோ 1:15. ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு எர்மொகெனே முதலாய் என்னைவிட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்.

2தீமோ 1:16. ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவுமில்லை;

2தீமோ 1:17. அவன் ரோமாவில் வந்திருந்த போது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்.

2தீமோ 1:18. அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக; அவன் எபேசுவிலே செய்த பற்பல உதவிகளையும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாயே.

கிறிஸ்துவின் உபதேசத்தைவிட்டு விலகிப்போன ஒரு சிலரைப்பற்றி பவுல் இங்கு எழுதுகிறார். அதைப்பற்றிச் சொல்லும்போது அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைவிட்டு விலகிப்போனார்கள் என்று சொல்லுவதற்குப் பதிலாக, அவர்கள் தன்னை விட்டு விலகிப் போனதாகச் சொல்லுகிறார் (1தீமோ 1:16). ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு எர்மொகெனே ஆகியோரும் பவுலைவிட்டு விலகிப்போனார்கள்.

அப்போஸ்தலர் பவுல் ஒநேசிப் போருவைப் பற்றி எழுதுகிறார். அவர் பவுலின் விலங்கைக் குறித்து வெட்கப்படவில்லை. அநேகந்தரம் அவர் பவுலை இளைப்பாற்றினார். பவுலுக்கு அநேக உதவிகளைச் செய்தார். ஒநேசிப்போரு ரோமாவில் வந்திருந்தபோது, அவர் அதிக ஜாக்கிரதையாய் பவுலைத் தேடி கண்டுபிடித்தார் (1தீமோ 1:16,17). நல்லவர்கள் நன்மை செய்வதற்கு வாய்ப்புக்களைத் தேடி கண்டுபிடிப்பார்கள். அவர் எபேசுவிலே பவுலுக்கு பற்பல உதவிகளைச் செய்திருக்கிறார். அவர் பவுல்மீது மிகவும் அன்பாகவும் கரிசனையோடும் இருந்திருக்கிறார். தனக்கு உதவிசெய்த ஒநேசிப்போருக்காக பவுல் ஜெபம்பண்ணுகிறார் (1தீமோ 1:18).

பவுல் ஒநேசிப்போருக்காகவும், அவருடைய வீட்டாருக்காகவும் ஜெபிக்கிறார். அந்நாளிலே அவர் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவருக்கு அநுக்கிரகம் செய்வாராக என்று ஜெபிக்கிறார். "அந்நாளில்" என்னும் வார்த்தை ஒநேசிப்போருவின் மரணநாளையும், அவருடைய நியாயத்தீர்ப்பு நாளையும் குறிப்பிடுகிற வார்த்தையாகும். கர்த்தருடைய நாளின்போது நாம் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடைய வேண்டும். அதுவே நமக்கு மிகுந்த ஆசீர்வாதம்.

2 தீமோத்தேயு - விரிவுரை

II TIMOTHY - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

நியாயத்தீர்ப்பு நாளின்போது, நாம் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடைய வேண்டுமென்றால், அந்த இரக்கத்தை நாம் இப்பிரபஞ்சத்திலிருக்கும்போதே தேட வேண்டும். கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டடைவார்கள். அவருடைய இரக்கத்தை விரும்புகிறவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள். நாம் நமக்காகவும், நம்முடைய சிநேகிதருக்காகவும் பல காரியங்களைக் குறித்து கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறோம். நமக்கு ஏராளமான தேவைகள் இருக்கலாம். ஜெபிப்பதற்கு ஜெபக்குறிப்புக்கள் பல இருக்கலாம். நம்முடைய எல்லா விண்ணப்பத்திற்கும் மேலாக, நாம் கர்த்தருடைய நாளில், கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடைய வேண்டும் என்று ஜெபம்பண்ணவேண்டும்.

2 அதிகாரம்

தீமோத்தேயு தன்னுடைய ஊழியத்தை விசுவாசத்தோடு செய்யுமாறு பவுல் அவரை உற்சாகப்படுத்துகிறார். ஊழியத்திற்கு உதவி எங்கிருந்து வரும் என்பதையும் பவுல் தெளிவுபடுத்துகிறார் (2தீமோ 2:1). தீமோத்தேயு தனக்குப் பின்பு, தான் செய்கிற ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு, உண்மையுள்ள ஊழியக்காரர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். (2தீமோ 2:2). தீமோத்தேயு தான் செய்கிற ஊழியத்தைச் சோர்வில்லாமல், நீடியபொறுமையைக் காத்துக்கொண்டு நிறைவேற்றவேண்டும். எல்லா பாடுகளுக்கும் முடிவு உண்டு (2தீமோ 2:3-15). சீர்கேடான வீண்பேச்சுக்களுக்கு விலகியிருக்கவேண்டும் (2தீமோ 2:16-18). தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது (2தீமோ 2:19-23). தீமோத்தேயு விலகி ஓடவேண்டிய காரியங்கள் (2தீமோ 2:22-26).

கிருபையில் பலப்படு
2தீமோ 2 : 1-7

2தீமோ 2:1. ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.

2தீமோ 2:2. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.

2தீமோ 2:3. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி.

2தீமோ 2:4. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்.

2தீமோ 2:5. மேலும் ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்.

2தீமோ 2:6. பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்.

2தீமோ 2:7. நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக் கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்.

தீமோத்தேயு தான் செய்கிற ஊழியத்தில் உறுதியாயிருக்கவேண்டும். அதை நீடியபொறுமையோடு தொடர்ந்து செய்ய வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள், அந்த ஊழியத்தைச் செய்வதற்கு பலப்பட வேண்டும். கிருபையின் சத்தியம் எங்கு இருக்கிறதோ அங்கு கிருபையில் பலப்பட்டு ஊழியம் செய்கிற வாய்ப்பும் கிடைக்கும். நாம் கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்பட வேண்டும். நன்மையான காரியத்தில் நாம் பலப்பட்டு வளர்ச்சி பெறவேண்டும். நம்முடைய சுயபலத்தில் நிற்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு நம்முடைய சுயபலம் போதுமென்று எண்ணக்கூடாது.

கர்த்தருடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருமே கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்பட வேண்டும். கிறிஸ்துவின் கிருபை நமக்குப் போதுமானது. அவர் எல்லாவற்றிற்கும் நமக்குப் போதுமானவராகயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவிடம் அவருடைய பிள்ளைகளெல்லோருக்கும் போதுமான கிருபையிருக்கிறது. அப்படிப்பட்ட தேவகிருபையில் நாம் பலப்படவேண்டும். நம்முடைய சுயபலத்தில் பலப்பட வேண்டுமென்று நாம் பிரயாசப்படக் கூடாது.

நாம் ஏற்கெனவே பெற்றுக்கொண்ட கிருபையில் பலப்பட வேண்டுமென்று நினைக்கக்கூடாது. நமக்குத் தேவையான கிருபை இயேசுகிறிஸ்துவிடத்தில் உள்ளது. ஆகையினால் நம்முடைய சுயபலத்தில் அல்ல, நாம் ஏற்கெனவே பெற்றுக் கொண்ட பழைய கிருபையில் அல்ல, கிறிஸ்து இயேசுவிலுள்ள புதிய கிருபைகளில் நாம் பலப்படவேண்டும் (2தீமோ 2:2).

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு சுவிசேஷத்தினிமித்தமாய் பாடுகள் வரும். உபத்திரவங்கள் வரும். பவுல் தீங்கு அநுபவித்ததுபோல தீமோத்தேயுவும் தீங்கு அநுபவிக்க வேண்டும். பாடுகளை அநுபவிக்க தீமோத்தேயு ஆயத்தமாயிருக்க வேண்டும். சாதாரண பாடுகளை மாத்திரமல்ல, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினிமித்தமாய் இரத்தசாட்சியாய் மரிக்கவும் தீமோத்தேயு ஆயத்தமாயிருக்க வேண்டும். தீமோத்தேயு மரித்துப்போகும் போது, அது வரையிலும் அவர் செய்து வந்த ஊழியம் அப்படியே நின்றுபோய்விடக் கூடாது. ஊழியம் தொடரவேண்டும். ஊழியம் தொடர வேண்டுமானால், தீமோத்தேயுவுக்குப் பின்பு, அந்த ஊழியத்தை யாராவது பொறுப்பெடுத்து தொடர்ந்து செய்யவேண்டும்.

தீமோத்தேயு அநேக சாட்சிகளுக்கு முன்பாக, பவுலிடத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டிருக்கிறார். அந்த உபதேசங்களை தீமோத்தேயு, மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும். தனக்குப் பின்பு, தான் செய்த சுவிசேஷ ஊழியத்தை, தொடர்ந்து செய்வதற்கு உண்மையுள்ள மனுஷருக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். அவர்களுடைய கரங்களில் சுவிசேஷத்தை நம்பி ஒப்புக் கொடுக்க வேண்டும். அவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாகயிருந்தால் தான், தீமோத்தேயு பவுலிடத்தில் கேட்டுக் கொண்ட உபதேசத்தை, அவர்கள் மற்றவர்களுக்கு அப்படியே போதிப்பார்கள் (2தீமோ 2:2).

ஊழியர்களை பிரதிஷ்டைபண்ணும் போது நாம் இரண்டு காரியங்களைப் பார்க்க வேண்டும். அவையாவன: 1. அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். 2.மற்றவர்களுக்குப் போதிக்கிற திறமை அவர்களிடம் இருக்கவேண்டும். ஊழியக்காரர்கள் தங்களைப்பற்றி நன்றாய் அறிந்து வைத்தால் மாத்திரம் போதுமானதல்ல. அவர்கள் மற்றவர்களுக்கும் சத்தியத்தைப் போதிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தாங்கள் பக்தியுள்ளவர்களாக இருந்தால் மாத்திரம் போதாது. மற்றவர்களுடைய பக்திவிருத்திக்கேதுவாக போதிக்கவும் தெரிந்திருக்கவேண்டும்.

தீமோத்தேயு இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய் தீங்கு அநுபவிக்கவேண்டும் (2தீமோ 2:3). எல்லா விசுவாசிகளும், விசேஷமாக எல்லா ஊழியக்காரர்களும் இயேசுகிறிஸ்துவுக்கு போர்ச் சேவகர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் போர்ச்சேவகர்கள் நல்ல போர்ச்சேவகர்களாக பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தங்களுடைய படைத் தளபதிக்கு போர்ச்சேவகர்கள் உண்மையுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும். தங்களுடைய நடையில் உறுதியோடு முன்னேறிச் செல்லவேண்டும். தெளிந்த சிந்தனையுள்ளவர்களாக தீர்மானம்பண்ணவேண்டும்.

நல்ல போர்ச்சேவகர்கள் கடினமான காரியங்களைச் சகித்துக் கொள்வார்கள். போராட்டத்தினிமித்தம் தீங்கு அநுபவிப்பதற்கு ஆயத்தமாயிருப்பார்கள். விசுவாசிகளாகிய நமக்கு இப்பிரபஞ்சத்தில் போராட்டம் உண்டு. நமக்கு போராட்டம் வரும்போது அவற்றை பொறுமையோடு எதிர்கொள்ள வேண்டும். நல்ல போர்ச்சேவகனாக யுத்தம்பண்ணவேண்டும். யுத்தத்தில் காயங்கள் ஏற்படும்போது யுத்தக்களத்தை விட்டு பயந்து ஓடிவிடக் கூடாது. நீடிய பொறுமையோடு தொடர்ந்து யுத்தம்பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவனாய் தீங்கு அநுபவிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

நல்ல போர்ச் சேவகன் இப்பிரபஞ்சத்தின் காரியங்களில் சிக்கிக் கொள்ளமாட்டான். இவன் தண்டில் சேவகம் பண்ணுகிறவன். தன்னை சேவகம் எழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிரயாசப்படுவான். நல்ல போர்ச்சேவகன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான் *(2தீமோ 2:4)*. நம்மை இயேசு கிறிஸ்துவுக்கு போர்ச்சேவகராக ஒப்புக் கொடுக்கும் போது, நாம் இப்பிரபஞ்சத்தின் காரியங்களில் சிக்கிக் கொள்ளாமல், அவற்றிலிருந்து விலகியிருக்கவேண்டும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் வரையிலும், இப்பிரபஞ்சத்தின் காரியங்களிலிருந்து நம்மால் முழுமையாக விலகியிருக்க முடியாது. அதே வேளையில் நாம் இப்பிரபஞ்சத்தின் காரியங்களில் சிக்கிக்கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஊழியக்காரர்களுக்கு கர்த்தருடைய ஊழியமே பிரதானம். கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளக்கூடாது.

ஒவ்வொரு போர்ச்சேவகனும், தன்னுடைய படைத்தளபதிக்கு ஏற்றவனாயிருக்கவேண்டும். அவனுக்குக் கீழ்ப்படிந்து, தலைவன் சொன்ன வேலைகளை செம்மையாய் நிறைவேற்ற வேண்டும். தங்களுடைய போர்ச் சேவகர்களைப் பார்த்து அவர்களுடைய தலைவர்கள் சந்தோஷப்படவேண்டும். யுபருமைப்பட வேண்டும். ஒவ்வொரு போர்ச் சேவகனும், தன்னுடைய படைத்தளபதிக்கு ஏற்றவனாயும், அவனுக்கு பிரியமுள்ளவனாயும் நடந்து கொள்ளவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்கு போர்ச் சேவகனாயிருக்கிற நாமும், கிறிஸ்துவுக்கு ஏற்றவர்களாகவும், அவருக்குப் பிரியமானவர்களாகவும் நடந்து கொள்ளவேண்டும். நல்ல போர்ச்சேவகன் படைத்தளபதிக்கு ஏற்றவனாயிருப்பான். நல்ல விசுவாசி கர்த்தருக்கு ஏற்றவராயிருப்பார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் எல்லோருக்கும் ஆவிக்குரிய யுத்தம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் தாறுமாறாக யுத்தம்பண்ண முடியாது. மல்யுத்தம் பண்ணுகிறவன் சட்டத்தின்படி மல்யுத்தம் பண்ணவேண்டும். அப்போதுதான் அவன் முடிசூட்டப்படுவான். விசுவாசிகளாகிய நாமும் ஆவிக்குரிய யுத்தத்தில் பங்கு பெறும் போது, யுத்தத்தின் சட்டத்திற்குட்பட்டு யுத்தம்பண்ணவேண்டும் *(2தீமோ 2:5)*. நன்மையான காரியத்தை நன்மையான வழியில் செய்யவேண்டும். நாம் செய்கிற நன்மையை மற்றவர்கள் தூஷிக்கக்கூடாது. எல்லாற்றிற்கும் ஒரு ஒழுங்கும் முறையும் உண்டு. ஒவ்வொரு காரியத்தையும் அதற்கேற்ற முறைப்படி செய்யும்போதுதான் அதற்கு மேன்மை உண்டாகும். கர்த்தருடைய ஊழியத்தை, நாம் முறைப்படி செய்யும்போது, முடிவில் முடிசூட்டப்படுவோம்.

நம்முடைய பிரயாசத்திற்கு ஏற்றபலனை கர்த்தர் ஏற்ற வேளையில் கொடுப்பார். பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும் *(2தீமோ 2:6)*. பலனில் பங்கடைய வேண்டுமென்றால் நாம் பிரயாசப்பட வேண்டும். பிரயாசப்படாதவர்களுக்கு பலனில் பங்குமில்லை பாத்தியமுமில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். தேவனுடைய சித்தத்தின்படி நாம் செயல்படவில்லையென்றால், நமக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தில் பங்குமில்லை. பாத்தியமுமில்லை.

தான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்ளுமாறு அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்தி சொல்லுகிறார். தான் ஏற்கெனவே சொன்னவைகளைபவுல் தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்துகிறார். தேவனுடைய காரியங்களைக் குறித்து தீமோத்தேயு சிந்தித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய காரியங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்துகிறார். சிந்தித்து செயல்படும்போது நம்முடைய சம்பாஷணை தெளிவாகயிருக்கும். நாம் சிந்தித்து மனந்திரும்பும்போது நம்முடைய மனமாற்றம் ஆரோக்கியமானதாக இருக்கும். அவசரப்பட்டு எதை செய்தாலும் அது பிரயோஜனப்படாது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்காக ஜெபம்பண்ணுகிறார். "கர்த்தர் எல்லா காரியங்களிலும் உனக்கு புத்தியைத் தந்தருளுவார்" (2தீமோ 2:7) என்று ஜெபம்பண்ணுகிறார். நாம் இப்பிரபஞ்சத்தில் எவ்வளவு பெரிய அறிவாளிகளாயிருந்தாலும் நமக்கு இன்னும் அதிகமான புத்தி தேவைப்படுகிறது. புத்தி கர்த்தர் கொடுக்கிற வரம். நாம் எல்லோருமே இந்த வரத்தை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நாம் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம்பண்ணுகிறவர்கள். நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள், சத்தியத்தைத் தங்கள் இருதயத்தில் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால், நம்முடைய பிரசங்கத்தினால் பிரயோஜனமில்லை. புரியும் விதத்தில் பேசத்தெரியவில்லையென்றால் நமக்குப் பேசத் தெரியாது என்று தான் பொருள். தேவனே நமக்கு தம்முடைய சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். அந்தச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் புத்தியை அவர் நமக்குத் தரவில்லையென்றால், நாம் ஒன்றுமில்லாதவர்களாயிருப்போம். கர்த்தரே நமக்கு எல்லா காரியங்களிலும் புத்தியைத் தரவேண்டுமென்று அவருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

தேவவசனம் கட்டப்பட்டிருக்கவில்லை
2தீமோ 2 : 8-13

2தீமோ 2:8. தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின்படியே, மரித்தோரிலிருந் தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக் கொள்.

2தீமோ 2:9. இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை.

2தீமோ 2:10. ஆகையால், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்.

2தீமோ 2:11. இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;

2தீமோ 2:12. அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;

2தீமோ 2:13. நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்.

பவுல் தீமோத்தேயுவை பாடுகளை அநுபவிக்க உற்சாகப்படுத்துகிறார். பாடுகளை அநுபவிக்கும்போது, இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நம்முடைய இருதயத்தில் இந்த சிந்தனை எப்போதும் நிரம்பியிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்னும் சிந்தனை நம்மை உண்மையுள்ள ஊழியக்காரராக்கும்.

இயேசுகிறிஸ்து மனுஷ அவதாரம் எடுத்ததையும், அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதையும் நம்முடைய இருதயத்தில் நாம் விசுவாசிக்கவேண்டும். இந்தச் சத்தியத்தை நாம் தியானிக்க வேண்டும். இப்பிரபஞ்சத்தில் நம்முடைய விசுவாசத்தினிமித்தம் நமக்கு பல பாடுகள் வந்தாலும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய இந்த சிந்தனை நமக்கு ஆதரவாயிருக்கும். இப்படிப்பட்ட சிந்தனை பாடுகளை சகித்துக்கொள்ள நம்மை பலப்படுத்தும் (2தீமோ 2:8).

பாடுகளை அநுபவிக்கும்போது தன்னை ஒரு முன்மாதிரியாக நினைத்துக் கொள்ளுமாறு பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொல்லுகிறார். தீமோத்தேயு பாடுகளை அநுபவிக்கும்போது, அவர் பவுலின் பாடுகளை நினைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவருக்கு ஆறுதலாகயிருக்கும். சுவிசேஷத்தினிமித்தம் தான் மாத்திரம் பாடுகளை அநுபவிக்கவில்லை என்றும், தனக்கு முன்பு பவுல் இதற்காக பாடுகளை அநுபவித்திருக்கிறார் என்று நினைத்து தீமோத்தேயு ஆறுதலடையலாம்.

அப்போஸ்தலர் பவுல் இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினிமித்தம் பாதகன் போல கட்டப்பட்டிருக்கிறார். துன்பத்தை அநுபவிக்கிறார் (2தீமோ 2:9). இப்பிரபஞ்சத்தில் நன்மை செய்கிற அநேகர் பல பாடுகளை அநுபவிக்கிறார்கள். பிறருக்கு அதிக நன்மைகளைச் செய்கிறவர்களை இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் துன்பப்படுத்துகிறார்கள். நல்லவர்கள் பாடுகளை அநுபவிப்பது நமக்குப் புதுமையல்ல.

சுவிசேஷத்தினிமித்தம் பவுல் பாதகன் போல கட்டப்பட்டிருக்கிறார். ஆனால் தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. இதை நினைக்கும் போது பவுலுக்கு மிகுந்த ஆறுதலாகயிருக்கிறது. மனுஷரைத் துன்பப்படுத்தகிற வல்லமையினால் தேவனுடைய வசனத்தை கட்டுப்படுத்த முடியாது. மனுஷருடைய இருதயத்திலும், மனச்சாட்சியிலும் தேவனுடைய வசனம் கிரியை செய்வதை, பாடுகளினாலும் உபத்திரவங்களினாலும் தடுத்து நிறுத்த முடியாது. அவற்றிற்கு தேவவசனத்தின் மீது அதிகாரமில்லை. தேவவசனத்தை ஒருபோதும், ஒருவராலும் கட்டிப்போட முடியாது. மனுஷருடைய எந்த சக்தியினாலும் தேவவசனத்தை கட்ட முடியாது.

பவுலின் வார்த்தை தீமோத்தேயுவுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கலாம். இயேசு கிறிஸ்துவினிமித்தமாகவும், அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் கட்டுக்கள் வந்தாலும், பயப்படாமல் கர்த்தருக்கு சாட்சியாக ஊழியம் செய்ய, பவுலின் வார்த்தைகள் தீமோத்தேயுவுக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. பவுலின் வார்த்தைகள் தீமோத்தேயுவை பாடநுபவிக்க உற்சாகப்படுத்துகிறது.

அப்போஸ்தலர் பவுல் எல்லா பாடுகளையும் சந்தோஷமாகச் சகித்துக் கொள்கிறார். சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது. நம்மைப் போலவே ஏராளமானோர் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசித்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசு கிறிஸ்துவினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்கிறார்கள்.

தன்னுடைய பாடுகளும் கட்டுகளும், பிறருடைய இரட்சிப்புக்கு ஏதுவாயிருக்கிறது என்பதை நினைவு கூர்ந்து, பவுல் சகலத்தையும் அவர்கள் நிமித்தமாய் சகித்துக் கொள்கிறார். மற்றவர்கள் இரட்சிக்கப்படும் போது பவுலுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. இந்தச் சந்தோஷத்தின் மத்தியில், பாடுகள் கட்டுகள் மூலமாய் வருகிற வேதனைகள், அவருக்கு ஒரு பொருட்டாய்த் தெரியவில்லை (2தீமோ 2:10).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பிரபஞ்சத்தின் காரியங்களை மாத்திரம் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. இம்மைக்குரிய காரியங்களில் மாத்திரம் கவனம் செலுத்தக்கூடாது. நம்முடைய மறுஜீவனைப் பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். அதுவே நமக்கு நித்திய ஜீவன். இப்பிரபஞ்சத்தைப்பற்றி சிந்திக்கும்போது, பரலோகத்தைப்பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். பரலோகமே நமக்கு நித்திய வாசஸ்தலம். அப்போஸ்தலர் பவுல் நமக்கு வரப்போகிற மகிமையை எடுத்துச் சொல்லி, தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்துவை உண்மையாய்ப் பற்றிக்கொள்கிறவர்கள் பரலோகத்தில் அதற்கேற்ற பலனை அடைவார்கள். கர்த்தரைப் பின்பற்றுவதற்கு என்ன கிரயம் செலுத்த வேண்டியிருந்தாலும், அதை செலுத்துவதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் இந்த உலகத்திற்கு மரித்திருப்போமென்றால், பரலோகத்தில் கிறிஸ்துவோடுகூட நித்திய காலமாய் ஜீவித்திருப்போம். நாம் இயேசு கிறிஸ்துவோடே கூட மரித்தோமானால் அவரோடேகூட பிழைத்துமிருப்போம் *(2தீமோ 2:11)*.

கிறிஸ்துவோடேகூட பாடுகளை சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் *(2தீமோ 2:12)*. இந்தப் பூமியில் இயேசுகிறிஸ்துவுக்காக பாடுகளை சகிக்கிறவர்கள், பரலோகத்தில் அவரோடுகூட ஆளுகை செய்வார்கள். இப்பிரபஞ்சத்தில் நாம் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் மறுதலித்தால், அவரும் நம்மை பரலோகத்தில் மறுதலித்து விடுவார்.

நாம் கர்த்தருக்கு உண்மையில்லாதவர்களாயிருந்தால் நமக்கு அழிவு நிச்சயம். நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உண்மையுள்ளவராயிருக்கிறார். நாம் கர்த்தருக்கு உண்மையில்லாமல், அவரை மறுதலிக்கும்போது, அவர் தம்முடைய நீதியில் உண்மையுள்ளவராகயிருந்து நம்மை மறுதலித்து விடுவார். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தர் ஒருபோதும் தம்முடைய ஆள்தத்துவத்தை மறுதலிப்பதில்லை *(2தீமோ 2:13)*.

நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும், கர்த்தர் நம்மை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அவர் தம்முடைய நீதியில் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்மைத் தாமே மறுதலிக்கமாட்டார். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருப்போமென்றால், அவரும் நமக்கு உண்மையுள்ளவராயிருப்பார். நாம் அவருக்கு உண்மையில்லாதவர்களாயிருப் போமென்றால், அவர் நீதியாய் நியாயத் தீர்ப்பு செய்வதில் உண்மையுள்ளவராயிருந்து, நம்மை ஆக்கினைக்குட்படுத்துவார். இந்த வார்த்தை உண்மையுள்ளது என்று பவுல் சொல்லுகிறார். நாம் இந்த வார்த்தையை சார்ந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே இந்த வார்த்தையின்மீது விசுவாசம் வைத்திருக்க வேண்டும்.

கர்த்தருக்கு முன்பாக எச்சரித்துப் புத்திசொல்லு 2தீமோ 2 : 14-18

2தீமோ 2:14. இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல், கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்பபோடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு.

2தீமோ 2:15. நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

2தீமோ 2:16. சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்.

2தீமோ 2:17. அவர்களுடைய வார்த்தை அரி பிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்;

2தீமோ 2:18. அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்.

தீமோத்தேயு செய்ய வேண்டிய ஊழியத்தைக்குறித்து பவுல் அவருக்குப் புத்திசொல்லுகிறார். தன்னுடைய பொறுப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற ஜனங்களுக்கு, தீமோத்தேயு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும். அவர்களை பக்திவிருத்திக்கு நேராக வழிநடத்த வேண்டும். கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்ல வேண்டும் (2தீமோ 2:14). இதுவே எல்லா ஊழியக்காரர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியம்.

ஜனங்களுக்கு இதுவரையிலும் தெரியாத புதுமையான காரியங்களை அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்னும் அவசியமில்லை. ஆனாலும், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவையான காரியங்களை அவர்களுக்கு விசுவாசத்தோடு சொல்ல வேண்டும். கர்த்தருடைய சத்தியங்களை அவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டும். வாக்குவாதம் ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. அது கேட்கிறவர்களை கவிழ்த்துப் போடும். வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக விசுவாசிகளுக்கு எச்சரித்துப் புத்திசொல்லவேண்டும்.

வாக்குவாதம் செய்வதினால் ஒரு பிரயோஜனமுமில்லை என்பதை விசுவாசிகள் புரிந்துகொள்ள வேண்டும். இதை அவர்கள் அறிந்துகொண்டால் வாக்குவாதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். எல்லோருமே தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்ல வேண்டுமென்று விரும்புவார்கள். மற்றவர்கள் சொல்லுவதைக் கேட்காமல் தாங்கள் நினைப்பதும், சொல்லுவதும்தான் சரியானது என்று சாதிப்பார்கள். கருத்து வேறுபாடு உண்டாகும்போது வாக்கு வாதம் பண்ணுவார்கள். இப்படிப்பட்ட வாக்குவாதத்தினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகப் போவதில்லை. இது கேட்கிறவர்களையும் அவர்களுடைய விசுவாசத்திலிருந்து கவிழ்த்துப்போடும்.

ஒரு சில வாக்குவாதத்திற்கு முடிவே இருக்காது. சிலர் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லவே முடியாது. இதனால் யாருக்கும் பக்திவிருத்தியும் உண்டாகாது. இருக்கிற பக்தியும் காணாமல் போய்விடும். வாக்குவாதம் விசுவாச ஜீவியத்தை கவிழ்த்துப்போடும்.

தீமோத்தேயு வெட்கப்படாத ஊழியக்காரனாயிருக்கவேண்டும். சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் இருக்கவேண்டும். தன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி தீமோத்தேயு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (2தீமோ 2:15). திறமையில்லாதவர்களும், உண்மையில்லாதவர்களும், சோம்பேறிகளும்தான் வெட்கப்பட வேண்டிய ஊழியக்காரர்கள். தங்கள் வேலையில் உண்மையாயிருந்து, தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலையை கருத்தாய்ச் செய்கிற ஊழியக்காரர்கள் வெட்கப்பட வேண்டியதில்லை.

ஊழியக்காரர்களுக்கு கர்த்தரே ஊழியத்தை நியமித்திருக்கிறார். அவர்கள் புதிதாக ஒரு சுவிசேஷத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரிடத்தில், தம்முடைய ஊழியத்தை நம்பி ஒப்புக் கொடுத்திருக்கிறார். அந்த நம்பிக்கைக்கு ஊழியக்காரர்கள் பாத்திரவான்களாயிருக்க வேண்டும். சத்தியத்தைவிட்டு விலகக் கூடாது. சத்தியத்தைப் புரட்டக்கூடாது. சத்திய வசனத்தை உண்மையாயும் நிதானமாயும் பகுத்துப் போதிக்கவேண்டும். உண்மையுள்ள ஊழியக்காரர்கள் வெட்கப்பட வேண்டியதில்லை (2தீமோ 2:15).

தன்னுடைய ஊழியத்திற்கு தடையாகயிருக்கிற காரியங்களைக் குறித்து தீமோத்தேயு மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். சீர்கேடான வீண்பேச்சுக்களுக்கு விலகியிருக்க வேண்டும். ஒருவர் வீண்பேச்சுக்களில் பிரியப்படும்போது, அவர் அவபக்திக்கு உள்ளவராகிவிடுவார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் தப்பிதம் பண்ணும்போது, நமக்கு வளர்ச்சி இருக்காது. மலை உச்சியிலிருந்து கீழே இறங்குவதுபோல, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் சரிவு உண்டாகும் (2தீமோ 2:16).

வீண்பேச்சுக்களான வார்த்தைகள் தொற்றுநோயைப்போன்றது. ஒருவருக்கு நோய் வரும்போது, அந்த நோய் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். கள்ளபோதர்களின் வார்த்தைகளும் அரிபிளவையைப் போல படரும் (2தீமோ 2:17). ஒருவர் தப்பிதம் செய்யும்போது, எல்லோரும் தப்பிதம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். இமெநே, பிலேத்து ஆகியோர் வீண்பேச்சுக்களைப்பேசி, விசுவாசிகள் மத்தியில் அவபக்தியை உண்டு பண்ணினார்கள். இவர்களைக் குறித்தும் தீமோத்தேயு எச்சரிப்போடிருக்க வேண்டும்.

கள்ளப்போதகர்கள் கிறிஸ்துவின் சத்தியத்தை மொத்தமாய் மறுதலிக்கமாட்டார்கள். சத்தியத்தைப் புரட்டுவார்கள். சத்தியத்தைவிட்டு விலகியிருப்பார்கள். பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலை மறுதலிக்கமாட்டார்கள். வேதஉபதேசத்தின்படி பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல்இன்னும் நடைபெறவில்லை. ஆனால் கள்ளப்போதர்களோ உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சொல்லுகிறார்கள் (2தீமோ 2:18). தங்களுடைய பித்தலாட்டமான உபதேசத்தினால், கள்ளப்போதகர்கள் சிலருடைய விசுவாசத்தை கவிழ்த்துப் போடுகிறார்கள்.

கிறிஸ்துவின் உபதேசம் நிகழ் காலத்திற்கும் உரியது. வருங்காலத்திற்கும் உரியது. வருங்காலத்தைப் பற்றிய உபதேசத்தை யாரும் புரட்டி போதிக்கக் கூடாது. அது கிறிஸ்தவ விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடும். கிறிஸ்துவின் உபதேசம் மிகவும் தெளிவாகயிருக்கிறது. அதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால் கள்ளப்போதகர்களோ எளிமையான சத்தியத்தை, தங்கள் இஷ்டம்போல உபதேசித்து, சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். விசுவாசிகளுடைய விசுவாசத்தைத் தங்கள் துர்உபதேசத்தினால் கவிழ்த்துப் போடுகிறார்கள்.

கள்ளப்போதர்களின் துர்உபதேசம் மிகவும் ஆபத்தானது. ஒரு தப்பிதம் இன்னொரு தப்பிதத்தை உற்பத்தி பண்ணும். மனுஷர் சத்தியத்திற்கு விரோதமாக தப்பிதம்பண்ணும்போது, சத்தியத்திற்குப் பதிலாக தங்களுடைய சொந்த கற்பனைகளை சத்தியம் என்று சாதித்துவிடுகிறார்கள். இதனால் சிலருடைய விசுவாசம் கவிழ்ந்துபோகிறது.

தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் 2தீமோ 2 : 19-21

2தீமோ 2:19. ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக் கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.

2தீமோ 2:20. ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான மரமும், மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள்.

2தீமோ 2:21. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்து கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.

தேவனை விசுவாசிக்காதவர்களுக்கு அவருடைய வாக்குத்தத்தம் பலிக்காது. ஆனாலும் அவிசுவாசிகளினால் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவமாக்க முடியாது. தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது (2தீமோ 2:19). அவருடைய வாக்குத்தத்தமும் நிலைத்திருக்கிறது. தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியோரின் உபதேசங்களும் நிலைத்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு உபதேசங்களும், புதிய ஏற்பாட்டு உபதேசங்களும் இன்றும் நிலைத்திருக்கிறது. வானமும் பூமியும் அழிந்து போனாலும் கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் அழிந்துபோகாது. அது என்றும் நிலைத்திருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள பட்டயம். தேவனுடைய சத்தியத்தில் இரண்டு விதமான முத்திரைகள் போடப்பட்டிருக்கிறது. ஒரு முத்திரை நம்முடைய ஆறுதலை உறுதி பண்ணுகிறது. மற்றொரு முத்திரை நம்முடைய கடமையைத் தெளிவுபடுத்துகிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பது நமக்கு ஆறுதலான சத்தியம். அவர் ஒருபோதும் நம்மை கைவிட்டு விடுவதில்லை. தேவனுடைய உறுதியான அஸ்திபாரத்தில் இது ஒரு முத்திரையாகயிருக்கிறது.

கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலக வேண்டும். இது மற்றொரு முத்திரை. நாம் அநியாயத்தை விட்டு விலகவில்லையென்றால் கர்த்தர் நம்மைவிட்டு விலகிவிடுவார். நாம் அநியாயத்தில் நிலைத்திருக்கும்போது, கர்த்தர் நம்மை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளமாட்டார்.தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது என்பதற்கு இவ்விரண்டு சத்தியங்களும் முத்திரையாயிருக்கிறது.

ஒரு சிலர் தங்கள் விசுவாசத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். வேறு சிலரோ தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களில் சிலர் மரமும் மண்ணுமான பாத்திரங்களைப் போல இருக்கிறார்கள். இந்தப் பாத்திரங்கள் கனவீனத்திற்குரியவை (2தீமோ 2:20). ஆனாலும் எல்லா பாத்திரங்களும் கனவீனமானவையல்ல. ஊழியக்காரர்களில் சிலர் தவறு செய்யும்போது, விசுவாசிகளாகிய நமக்கு சோர்வு உண்டாகலாம். நாம் விழுந்துபோன ஊழியக்காரர்களையே நாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. சில சமயங்களில் நமக்கு சோர்வு வந்தாலும், கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து நாம் உற்சாகம்பெறவேண்டும்.

ஒரு வீட்டிலே மரமும் மண்ணுமான பாத்திரங்கள் இருப்பதுபோல, அங்கு பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களும் இருக்கும். இவை கனத்திற்குரியவைகள். வீட்டு எஜமானுடைய உபயோகத்திற்காக கனமான இந்தப் பாத்திரங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கும் (2தீமோ 2:21). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அநியாயத்தைவிட்டு விலகி, நம்மை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். கர்த்தர்தாமே நம்மை பரிசுத்தப்படுத்துவதற்கு, நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் நம் எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாகயிருப்போம். பரிசுத்தமாக்கப்பட்ட நாம் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டிருப்போம். கனத்திற்குரிய பாத்திரமாயிருப்போம்.

ஒவ்வொரு பாத்திரமும் எஜமானுக்கு உபயோகமுள்ளதாயிருக்க வேண்டும். கர்த்தருடைய சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு தேவன் நம்மை அங்கீகரிக்க வேண்டும். நம்முடைய அழைப்புக்கு நாம் பாத்திரவான்களாக நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நம்மால் கர்த்தருக்கு உபயோகமான பாத்திரமாக ஊழியம் செய்ய முடியும்.

ஒரு சிலர் கனவீனத்திற்குரிய பாத்திரங்களாக இருந்தாலும் அவர்களைப் பார்த்து நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அவருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யும்போது, அவர் நம்மை கனத்திற்குரிய பாத்திரமாக மாற்றுவார்.

பாலியத்திற்குரிய இச்சைகள் 2தீமோ 2 : 22-26

2தீமோ 2:22. அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.

2தீமோ 2:23. புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு.

2தீமோ 2:24. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்.

2தீமோ 2:25. எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்.

2தீமோ 2:26. பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு பாலியத்திற்குரிய இச்சைகளைக் குறித்து எச்சரித்துப் புத்திசொல்லுகிறார். மாம்சத்தின் இச்சைகள் பாலியத்திற்குரிய இச்சைகள். வாலிபவயதிலுள்ளவர்கள் பாலியத்திற்குரிய இச்சைகளைக் குறித்து மிகவும் எச்சரிப்போடிருக்கவேண்டும் 2தீமோ 2:22). பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு நீங்கி நம்மை எவ்வாறு காத்துக்கொள்வது என்பதற்கு பவுல் நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறார். பாலியத்திற்குரிய இச்சைகள் மிகவும் ஆபத்தானவை. இவை நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ணும்.

பாலியத்திற்குரிய இச்சைகளைவிட்டு நாம் விலகி ஓடவேண்டும். தேவனுடைய கிருபையைப் பற்றிக்கொள்ளவேண்டும். பாவத்தைவிட்டு விலகி ஓடினால் மாத்திரம் போதாது. தேவனுடைய நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடவேண்டும். நன்மையானவைகளை நாம் பற்றிக்கொள்ளும்போது தீமையானவைகள் நம்மைவிட்டு விலகிப் போகும். நன்மையான காரியங்களை எவ்வளவு வேகமாக பற்றிக் கொள்கிறோமோ, அவ்வளவு வேகமாக தீமையான காரியங்களைவிட்டு நம்மால் விலகி ஓடமுடியும்.

சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்கிறவர்களுடன் நாம் ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் நாம் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய இருதயத்தில் சுத்தம் இருக்க வேண்டும். சுத்தமில்லாத இருதயத்தோடு நாம் எவ்வளவுதான் ஜெபம்பண்ணினாலும், நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்காது. அசுத்த இருதயத்தோடே நாம் கர்த்தரை எப்படித்தான் ஆராதித்தாலும்,நம்முடைய ஆராதனையை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும். இந்தச் சத்தியத்தை அறிந்துகொண்டு, கர்த்தருடைய பிள்ளைகள் அவைகளுக்கு விலகியிருக்கவேண்டும் (2தீமோ 2:23). வாழ்க்கையில் முன்னேறுகிறவர்கள் தங்களை மேதைகளென்றும், ஞானிகளென்றும் நினைத்துக் கொள்கிறார்கள். தங்களுடைய சுயபுத்திக்கும், சுயமுயற்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் பவுலோ அவர்களை புத்தியீனர் என்று சொல்லி விடுகிறார். அவர்கள் அயுக்தமானவர்கள். அதாவது கல்லாதவர்கள். இப்படிப்பட்டவர்கள் விசுவாசிகள் மத்தியிலே சண்டைகளை மூட்டிவிடுகிறார்கள். தேவையில்லாத தர்க்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விசுவாசிகளைக் குழப்புகிறார்கள்.

கிறிஸ்தவ உபதேசத்தில் தர்க்கம் பண்ணுவதற்கு இடமில்லை. கர்த்தருடைய வார்த்தை மிகவும் தெளிவாகயிருக்கிறது. தேவவசனத்தை நாம் விசுவாசித்து, அவற்றிற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இதுவே கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்ப்பார்க்கிற காரியம். நாம் சாதுரிய வார்த்தைகளினால் தர்க்கம் பண்ணுகிறோமா அல்லது சுயஞானத்தினால் நன்றாக விவாதம் பண்ணுகிறோமா என்பதையெல்லாம் கர்த்தர் நோக்கிப் பார்ப்பதில்லை. அவர் நம்முடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் மாத்திரமே நோக்கிப் பார்க்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சண்டை பண்ணுகிறவர்களாக இருக்கக் கூடாது. அவர்கள் எல்லா இடத்திலும் சாந்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். தீமையை சகிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அதே வேளையில் அவர்கள் போதக சமர்த்தராகவும் இருக்க வேண்டும் (2தீமோ2:24). சண்டை பண்ணுகிறவர்களால் சத்தியத்தைத் தெளிவாகப் போதிக்க முடியாது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோருக்கும் சாந்தமாய் உபதேசிக்க வேண்டும் (2தீமோ 2:25,26). தங்களுடைய உபதேசத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு மாத்திரமல்ல, தங்களுக்கு எதிர்பேசுகிறவர்களுக்கும் சாந்தமாய் உபதேசிக்க வேண்டும். கர்த்தருடைய சத்தியத்தை அதன் வெளிச்சத்திலும், வல்லமையிலும் உபதேசம்பண்ண வேண்டும். தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்.

தங்களுக்கு எதிர்பேசுகிறவர்களும் சத்தியத்தை அறிய வேண்டுமென்று ஊழியக்காரர்கள் நாட வேண்டும். அதற்காக அவர்கள் தேவனுடைய சமுகத்தில் ஜெபிக்கவேண்டும். கர்த்தர் தாமே தங்களுக்கு எதிர் பேசுகிறவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாக விண்ணப்பம்பண்ண வேண்டும். மனந்திரும்புதல் தேவனுடைய ஈவு. கர்த்தருடைய சத்தியத்திற்கு விரோதமாக எதிர் பேசுகிறவர்கள், தங்களுடைய ஆத்துமாவுக்கு விரோதமாகவும், தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகவும் எதிர்பேசுகிறார்கள். கர்த்தருக்கு எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்கு விரோதமாக தாங்களே எதிர்த்து நிற்கிறார்கள்.

கர்த்தராகிய தேவனே சத்தியத்தை அறிகிற அறிவைத் தருகிறவர். அதே தேவனை மனுஷருக்கு மனந்திரும்புதலையும் அருளுகிறார். சத்தியத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படியக்கூடிய இருதயத்தையும் கர்த்தரே தருகிறார். கர்த்தர் நமக்கு மனந் திரும்புதலைக் கொடுக்கவில்லையென்றால், நம்முடைய இருதயம் கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக கலகம்பண்ணும். நாம் கலகக்காரர்களாகயிருப்போம். சண்டை பண்ணுகிறவர்களாகயிருப்போம். நம்மிடத்தில் சமாதானம் இருக்காது.

பாவிகள் பிசாசானவனுடைய கண்ணிகளிலிருந்து நீங்கி விடுதலை பெறவேண்டும். பிசாசின் கண்ணியில் சிக்கியிருப்பது பாவிகளின் பரிதாபமான நிலமை. அவர்கள் ஆளோட்டிகளுக்கு அடிமைப்பட்டிருப்பதுபோல,பிசாசானவனுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். தன்னுடைய இச்சையின்படி செய்ய பிசாசானவன் பாவிகளைப் பிடித்து வைத்திருக்கிறான். தன்னுடைய இச்சையினாலும், மாயவார்த்தைகளினாலும் பாவிகளை மயக்கியிருக்கிறான். அவர்கள் மறுபடியும் மயக்கம் தெளியவேண்டும். பிசாசானவனுடைய கண்ணிக்கு நீங்க வேண்டும்.

கண்ணிகளிலே மிகவும் ஆபத்தான கண்ணி பிசாசானவனுடைய கண்ணிதான். பிசாசின் கண்ணியில் விழுகிறவர்களுக்கு, தாங்கள் கண்ணியில் சிக்கியிருப்பதுகூட தெரியாது. அவர்கள் சுயநினைவு இல்லாமல் மயக்கத்திலிருப்பார்கள். மயக்கம் தெளியும் போதுதான், தாங்கள் கண்ணியில் சிக்கியிருப்பதே அவர்களுக்குத் தெரியும். சாதாரண கண்ணியிலல்ல, பிசாசானவனுடைய கண்ணியில் தாங்கள் சிக்கியிருப்பதைப் புரிந்து கொள்வார்கள். தன்னுடைய இச்சையின்படி செய்ய, பிசாசானவன் தங்களைப் பிடித்து அடிமைப்படுத்தியிருப்பதைப் புரிந்து கொள்வார்கள்.

சத்தியத்தை அறியும்படி தேவன் பாவிகளுக்கு மனந்திரும்புதலை அருளும் போதுதான், அவர்களுடைய உண்மையான நிலமை அவர்களுக்குத் தெரியவரும். மனந்திரும்புகிறவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் உண்டு. அவர்கள் பிசாசானவனுடைய கண்ணிக்கு நீங்கி விடுதலைபெறுவார்கள். இதுவரையிலும் பிசாசானவனுடைய இச்சையின்படி செய்தவர்கள், மனந்திரும்பிய பின்பு, கர்த்தருடைய சித்தத்தின்படி செய்வார்கள். இது வரையிலும் பிசாசானவனால் அடிமைகளைப் போல வழிநடத்தப்பட்டவர்கள், மனந்திரும்பிய பின்பு தேவனுடைய பிள்ளைகளுக்கு உரிய சுதந்தரத்தோடு, கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் போவார்கள். பிசாசானவனின் அடிமைத்தனம் பயங்கரமானது. தேவனுடைய விடுதலையோ மகிமையானது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இந்தச் சத்தியத்தையெல்லாம் ஜனங்களுக்கு சாந்தமாய் உபதேசிக்கவேண்டும்.

3 அதிகாரம்

கடைசி நாட்கள் எப்படியிருக்குமென்று அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு முன்னறிவித்து எச்சரிக்கிறார் (2தீமோ 3:1-9). கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்போது என்ன செய்யவேண்டுமென்று தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொல்லுகிறார். பவுலுக்குண்டான துன்பங்களையும், பாடுகளையும் தீமோத்தேயு அறிந்திருக்கிறார். தீமோத்தேயு வேதவசனத்திலே நல்லறிவு உள்ளவராகயிருக்கவேண்டும். மற்றவர்கள் மோசமானவர்களாக யிருந்தாலும், தீமோத்தேயு நல்லவராகயிருக்க வேண்டுமென்று பவுல் அவருக்குப் புத்திசொல்லுகிறார்.

கடைசி நாட்களில்
2தீமோ 3 : 1-9

2தீமோ 3:1. மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.

2தீமோ 3:2. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,

2தீமோ 3:3. சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறுசெய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,

2தீமோ 3:4. துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்,

2தீமோ 3:5. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.

2தீமோ 3:6. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு,

2தீமோ 3:7. எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

2தீமோ 3:8. யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்; இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்.

2தீமோ 3:9. ஆனாலும், இவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை; அவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டது போல, இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும்.

சபையில் மோசமானவர்கள் இருப்பதைப் பார்க்கும்போது தீமோத்தேயு ஆச்சரியப்படக்கூடாது. சுவிசேஷத்தின் வலையில் சகலவிதமான மீன்களும் நிரம்பியிருக்கும். அதில் நல்லவைகளும் இருக்கும். ஆகாதவைகளும் இருக்கும் (மத் 13:47,48). தங்கத்தில்கூட களிம்பு இருக்கும். பொன்னை உருக்கி புடமிடும்போதுதான், களிம்பு நீங்கி அது சுத்தப் பொன்னாக மாறும். கோதுமை தரையிலிருக்கும்போது அதோடு பதரும் சேர்ந்திருக்கும். இதுபோலவே சபையில் நல்லோரும் இருப்பார்கள். தீயோரும் இருப்பார்கள்.

அப்போஸ்தலர் பவுல் "கடைசி நாட்களில்" (2தீமோ 3:1) என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இது சுவிசேஷத்தின் நாட்களைக் குறிக்கிற வார்த்தை. இந்தக் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும். விசுவாசிகளுக்கு சபைக்கு வெளியிலிருந்து பாடுகளும் உபத்திரவங்களும் உண்டாகும். அதே வேளையில் சபைக்குள்ளேயும் மார்க்க பேதங்களும், தர்க்கங்களும், கள்ள உபதேசங்களும் இருக்கும். சபைக்கு வெளியே இருந்து உபத்திரவப் படுத்துகிறவர்களை விட, சபைக்கு உள்ளேயிருந்து துர்உபதேசத்தைப் போதிக்கிற கள்ளப்போதகர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

இரண்டாயிரம் சேனை வீரர்களைவிட, ஒரே சேனையிலிருக்கிற இரண்டு துரோகிகள் மிகவும் ஆபத்தானவர்கள். வெளிப்படையான சத்துருக்களைவிட உள்ளுக்குள்ளே மறைமுகமாக தீங்குசெய்கிற மாய்மாலக்காரர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஜனங்கள் துன்மார்க்கராயிருப்பார்கள். ஆகையினால் கடைசி நாட்களிலே கொடிய காலங்கள் வரும். பாவத்தினால் காலங்கள் கொடிதாகும்.

எது கடைசி நாட்கள் என்பதை எளிதாகக் கண்டுகொள்ளலாம். கடைசி நாட்களில் நடைபெறுகிற கொடிய சம்பவங்களை பவுல் இங்கு ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். கொடிய காலங்களுக்கு எதுவெல்லாம் அடையாளம் என்று பவுல் தெளிவுபடுத்துகிறார். கடைசி நாட்களில் மனுஷர்கள் தற்பிரியராயிருப்பார்கள். மனுஷருடைய சுயஆசை காலத்தைக் கொடிதாக்கிப்போடும் (2தீமோ 3:2).

நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும். இதுதான் கிறிஸ்துவின் உபதேசம். நம்முடைய நன்மைகளை நாம் விசாரிப்பதுபோல, நாம்பிறருடைய நன்மைகளையும் விசாரிக்கவேண்டும். தற்பிரியர்கள் பிறரைப்பற்றி கவலைப்படமாட்டார்கள். மற்றவர்களைப்பற்றிய அக்கறையோ, கரிசனையோ தற்பிரியரிடத்தில் சிறிதும் இருக்காது. தங்களுடைய பாடுகளை மாத்திரமே பார்ப்பார்கள்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் பணப் பிரியராயிருப்பார்கள். ரூபாசைக் காரராயிருப்பார்கள். தற்பிரியரான மனுஷர்களிடத்திலிருந்து நாம் எந்த உதவியும் எதிர்பார்க்க முடியாது. தற்பிரியர்கள் பிறருக்கு ஒரு நன்மையும் செய்யமாட்டார்கள். தேவன்மீது பிரியமாயிருக்கிறவர்கள் மாத்திரமே மற்றவர்களுக்கு நன்மை செய்வார்கள். கடைசி நாட்களில் மனுஷர்கள் தங்களுக்கென்று மாத்திரமே ஜீவிப்பார்கள். தாங்கள் பெற்றுக்கொண்டதை, தங்களுக்கு மாத்திரம் என்று வைத்துக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் மற்றவர்களைப் பற்றிய கரிசனையிருக்காது. இவர்கள் தங்களுடைய நன்மைகளை மாத்திரமே பார்ப்பதினால், இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு மிகவும் ஆபத்தானவர்கள்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் வீம்புக்காரராயும் அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும் இருப்பார்கள். மாயையான பெருமையை நாடுவார்கள். மனுஷரிடத்தில் தேவபயமில்லையென்றால், அவர்கள் மற்ற மனுஷரையும் மதிக்கமாட்டார்கள். கடைசி நாட்களில் பிள்ளைகள் தாய் தகப்பன்மாருக்கு கீழ்ப்படியமாட்டார்கள். தங்கள் பெற்றோருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவார்கள். பெற்றோரை நேசிக்காமல் அவர்களைத் தூஷிப்பார்கள்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் நன்றியறியாதவர்களாயிருப்பார்கள். பரிசுத்தமில்லாதவர்களாயிருப்பார்கள். நன்றியறியாமையும், பரிசுத்தமில்லாமையும் காலத்தை கொடியதாக்கும். தேவனுடைய கிருபைகளுக்கும், இரக்கங்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த நன்றி உணர்வு மனுஷரிடத்தில் இல்லையென்றால், அவர்களிடத்தில் பரிசுத்தமிருக்காது.

கடைசி நாட்களில் மனுஷர் சுபாவ அன்பில்லாதவர்களாயிருப்பார்கள் (2தீமோ 3:3). பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் போகும்போது, பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளிடத்தில் சுபாவ அன்பு இருக்காது. சுபாவ அன்புக்கு கீழ்ப்படியாதவர்கள் தேவனுடைய வார்த்தைக்கும், அவருடைய உடன்படிக்கைக்கும் கீழ்ப்படிய மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் இணங்காதவர்களாயிருப்பார்கள்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் அவதூறு செய்கிறவர்களாயிருப்பார்கள். ஒருவருக்கொருவர் அவதூறு பண்ணுகிறவர்கள் பிசாசின் பிள்ளைகள். இப்படிப்பட்டவர்கள் பிசாசின் கிரியைகளை ஆசையாய்ச் செய்வார்கள். மனுஷர்கள் ஆளுகைக்குட்பட்டிருக்க வேண்டும். தேவனுடைய பிரமாணம் நம்மை ஆளுகை செய்யவேண்டும். எந்த ஆளுகைக்கும் தங்களை உட்படுத்திக்கொள்ளாதவர்கள், இச்சையடக்கமில்லாதவர்களாயிருப்பார்கள். தங்களுடைய சுயஆசையை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். இப்படிப் பட்டவர்கள் கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும் இருப்பார்கள்.

நாம் நல்லோருக்கு மதிப்பு கொடுக்கவேண்டும். அவர்களோடு சிநேகமாகயிருக்கவேண்டும். கடைசி நாட்களில் மனுஷர்கள் நன்மையையும், நல்லோர்களையும் சிநேகிப்பதற்குப் பதிலாக, அவர்களைப் பகைப்பார்கள்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப் புள்ளவர்களாயும் இருப்பார்கள். துணிகரமான பாவங்களைச் செய்வார்கள். மனுஷரிடத்தில் தாழ்மையில்லாமல், பெருமையும், அகந்தையும், இறுமாப்பும் இருக்கும்போது, அவர்கள் மற்றவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுமில்லாமல் தாராளமாய்த் தீங்கு செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் நிமித்தமாய் கடைசி நாட்கள் கொடிய காலங்களாகயிருக்கும்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் தேவப்பிரியராயிராமல், சுக போகபிரியராயிருப்பார்கள் (2தீமோ 3:4). மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை. மாம்சசிந்தையில் தூஷணமும், துணிகரமும், இறுமாப்பும் நிறைந்திருக்கும். மாம்சசிந்தையுள்ளவர்கள் சுகபோக பிரியராயிருப்பார்கள். தேவனைப் பிரியப்படுத்தவேண்டும் என்னும் விருப்பம் இவர்களிடத்தில் சிறிதும் இருக்காது. சுகபோகமே இவர்களுடைய வாழ்வின் பிரதான ஆசையாயிருக்கும்.

கடைசி நாட்களில் மனுஷர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருப்பார்கள். ஆனால் அதின் பலனை அவர்கள் மறுதலித்துவிடுவார்கள். தேவபக்தியின் வேஷம் என்பது வேறு. தேவபக்தியின் பெலன் என்பது வேறு. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிற மனுஷரிடத்தில், தேவபக்தியின் பெலன் இல்லையென்றால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை (2தீமோ 3:5). இப்படிப்பட்டவர்களை விட்டு தீமோத்தேயு விலகவேண்டுமென்று பவுல் புத்திசொல்லுகிறார்.

சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிற ஒரு சிலரைப்பற்றி பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அவர்கள் துரிதமாய்க் கிரியை செய்து, ஜனங்களை வசப்படுத்தி, அவர்களை விசுவாசத்திலிருந்து விலகிப்போகச் செய்துவிடுவார்கள். இவர்கள் ஒரு சில வீடுகளில் நுழைந்து அவர்களை வசப்படுத்திக் கொள்கிறார்கள். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து தங்களை நல்லவர்கள்போல காண்பிக்கிறார்கள் (2தீமோ 3:6,7).

இவர்களால் வசப்படுத்தப் படுகிறவர்கள் பொதுவாக விசுவாசத்தில் பலவீனராகயிருப்பார்கள். அவர்கள் பாவங்களால் நிறைந்து பற்பல இச்சைகளால் இழுப்புண்டு போயிருப்பார்கள். எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருப்பார்கள்.

மதியீனமான சிந்தையும், அசுத்தமான இருதயமுமுடையவர்கள் வஞ்சிக்கிறவர்களுக்கு இடங்கொடுத்து வஞ்சிக்கப்படுவார்கள். எப்போதும் கற்பது போல பாசாங்கு செய்வார்கள். இது ஒரு மாய்மாலம். ஏனெனில் எப்போதும் கற்றாலும் இவர்கள் ஒருபோதும் சத்தியத்தை உணராதவர்களாகவே இருக்கிறார்கள்.

கள்ளப் போதகர்களும், வஞ்சிக்கிறவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள். விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றார்கள். இவர்கள் இருவரும் எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள். இவர்கள் இக்காலத்துக் கள்ளப்போதகர்களுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் சத்தியத்தை உணராதவர்களை வசப்படுத்திக் கொண்டு, அவர்களுடைய ஆத்துமாக்களை அழித்துப்போடுகிறார்கள். இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

பிறரை மோசம்போக்குகிறவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை. பிசாசின் ஆவி சில சமயங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும். அவன் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கொஞ்ச காலத்தில் ஜனங்களை வஞ்சிப்பான். ஆனால் அவனுக்கு நித்திய விடுதலை இல்லை. கர்த்தர் அவனை தம்முடைய சங்கிலிகளினால் கட்டிப்போடுவார். அப்போது துன்மார்க்கருடைய மதிகேடு வெளிப்படும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தார்கள். அவர்களை விடுதலைபண்ணுவதற்காக மோசே கர்த்தருடைய வல்லமையினால் பார்வோனின் அரண்மனையில் அற்புதங்களைச் செய்தார். அப்போது எகிப்து தேசத்தின் மந்திரவாதிகளாகிய யந்நேயும் யம்பிரேயும் தங்கள் மந்திர வித்தையினால் அற்புதம் செய்வதுபோல மாய்மாலம் பண்ணினார்கள். இவ்விருவருடைய மதிகேடு எல்லோருக்கும் வெளிப்பட்டது.

என் போதகம்
2தீமோ 3 : 10-17

2தீமோ 3:10. நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்,

2தீமோ 3:11. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார்.

2தீமோ 3:12. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

2தீமோ 3:13. பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.

2தீமோ 3:14. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,

2தீமோ 3:15. கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

2தீமோ 3:16. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

2தீமோ 3:17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு முன்பாக தன்னையே நல்ல முன்மாதிரியாக நிறுத்துகிறார். ஜனங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களையும், அவர்கள் செய்கிற ஊழியத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியிருந்தால்தான் அப்போஸ்தலருக்கு சத்துருக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஜனங்கள் அப்போஸ்தலர்களை தெரிந்துகொள்ள வில்லையென்றால், அவர்கள் அப்போஸ்தலர்களுக்கு சத்துருக்களாகி விடுவார்கள். அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொண்டவர்களோ, அவர்களை அதிகமாய் நேசிப்பார்கள். அவர்களை அதிகமாய்க் கனப்படுத்துவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தன் மூலமாய் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களுக்கு எதையும் மறைக்கவில்லை. பூரண சுவிசேஷத்தையும் வெளிப்படுத்துகிறார். தன்னைப்பற்றியும் அவர் மறைக்கவில்லை. தேவனுடைய பூரண ஆலோசனையை பவுல்அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். பவுல் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் தேவனுடைய ஆலோசனையைப் புரிந்துகொள்ளவில்லையென்றால் அது பவுலின் குற்றமல்ல. ஏனென்றால் பவுல் அவர்களுக்கு சத்தியத்தைப் பூரணமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். சத்தியத்தைக் கேட்டவர்கள்தான் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொள்ளாததது ஜனங்களுடைய தப்பிதமேயல்லாமல் பவுலின் தப்பிதம் ஆகாது.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு தன்னைப்பற்றி முழுவதுமாய் வெளிப்படுத்துகிறார். அவருடைய ஜீவியம், அவர் உபதேசிக்கிற சத்தியத்தோடு ஒத்துப்போகிறது. பவுலின் ஜீவியத்திற்கும் அவருடைய போதகத்திற்கும் முரண்பாடு எதுவுமில்லை. நம்முடைய போதகத்தை ஜனங்கள் கேட்டு, அவர்கள் பூரண ஆசீர்வாதம் பெறவேண்டுமென்றால், நம்முடைய போதகமும் ஜீவியமும் ஒத்துப்போக வேண்டும். நம்முடைய வார்த்தைக்கும் செயலுக்கும் முரண்பாடு இருக்கக்கூடாது. தீமோத்தேயு பவுலின் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும் நன்றாய் அறிந்திருக்கிறார் (2தீமோ 3:10).

பவுலின் நற்குணத்தை தீமோத்தேயு பூரணமாய் அறிந்திருக்கிறார். கிறிஸ்துவினிமித்தமாகவும் அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் பவுலுக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் தீமோத்தேயு நன்றாய் அறிந்திருக்கிறார்.

சுவிசேஷத்தினிமித்தம் பவுல் எவ்வளவோ துன்பங்களைச் சகித்தார் (2தீமோ 3:11). பவுலுக்கு ஊழியத்தில் அநேகப் பாடுகளும், துன்பங்களும் உண்டாயிற்று. ஆனாலும் அவற்றில் ஒரு சிலவற்றை மாத்திரம் பவுல் இங்கு குறிப்பிடுகிறார். அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா ஆகிய பட்டணங்களில் தனக்குண்டான துன்பங்களையும் பாடுகளையும் மாத்திரம் பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லுகிறார். இந்தப் பட்டணங்களில் மாத்திரமே தீமோத்தேயு பவுலோடு கூடயிருந்தார். ஆகையினால் இவையெல்லாவற்றையும் தீமோத்தேயு நன்றாய் அறிந்திருக்கிறார்.

பவுலுக்குண்டான துன்பங்களை மாத்திரமல்ல, இந்தத் துன்பங்களிலும் பாடுகளிலும் தேவன் பவுலை எவ்வாறு பலப்படுத்தினார், எவ்வாறு பாதுகாத்து பராமரித்தார் என்பதையும் தீமோத்தேயு நன்றாய் அறிந்திருக்கிறார். துன்பங்களின் மத்தியிலும், பாடுகளின் மத்தியிலும் பவுல் தன் ஊழியநோக்கத்தை விட்டு விலகிப்போய்விடவில்லை. விசுவாசத்தில் பின்வாங்கிப்போய்விடவில்லை. கர்த்தர் பவுலை கைவிட்டுவிடவில்லை. எல்லா துன்பங்களிலும், பாடுகளிலும், கர்த்தர் பவுலை நீங்கலாக்கிவிட்டார்.

பவுலுக்குண்டான துன்பங்களையும் பாடுகளையும் தீமோத்தேயு நன்றாய் அறிந்திருக்கிறார். எப்படி பாடுபட்டார் என்பதை மாத்திரமல்ல, அந்தப் பாடுகளின் மத்தியில் தேவன் அவரை எவ்வாறு பாதுகாத்து பராமரித்தார் என்பதையும் தீமோத்தேயு அறிந்திருக்கிறார். பரிசுத்தவான்களுடைய பாடுகளைப் பார்த்து நாம் பயந்துவிடக்கூடாது. நம்முடைய விசுவாசத்திலும் ஊழியத்திலும் சோர்ந்துபோய்விடக்கூடாது. பாடுகள், துன்பங்கள் மத்தியிலும், பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு எப்படி சாட்சியாக நடந்தார்கள் என்பதையும், தங்கள் விசுவாசத்தை எப்படி காத்துக் கொண்டார்கள் என்பதையும் பார்த்து நாம் உற்சாகமடையவேண்டும்.

துன்பங்களையும் பாடுகளையும் பற்றி பவுல் சுருக்கமாகச் சொல்லுகிறார். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள் (2தீமோ 3:12). தேவபக்தியாய் ஜீவிக்கிறவர்கள் துன்பங்களையும் பாடுகளையும் எதிர்பார்க்கவேண்டும். அதிலும் விசேஷமாக கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் ஜீவிக்க விரும்புகிறவர்களுக்கு நிச்சயமாய்த் துன்பமும் பாடுகளும் வரும். தேவபக்தியாய் ஜீவிக்கவேண்டுமென்று நாம் தீர்மானம் பண்ணும்போது, சத்துரு நமக்கு பல சோதனைகளைக் கொடுப்பான். நம்முடைய தேவபக்தியான நடக்கையின் நிமித்தமாயும், நம்முடைய விசுவாசத்தின் நிமித்தமாயும், நம்முடைய நோக்கத்தின் நிமித்தமாயும் நமக்கு அநேக துன்பங்களும் பாடுகளும் வரும். அவைகளை நாம் சகிக்கவேண்டும். நீடிய சாந்தத்தோடும், அன்போடும், பொறுமையோடும் துன்பங்களையும் பாடுகளையும் சகித்துத் தாங்கிக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலுடைய ஜீவியம் மூன்று காரியங்களுக்கு எடுத்துக் காட்டாயிருக்கிறது. அவையாவன: 1. அவருடைய போதகம் 2. அவருடைய ஜீவியம் 3. அவருடைய துன்பங்களும் பாடுகளும். பவுலின் ஜீவியம் துன்பங்களும் பாடுகளும் நிரம்பியதாகயிருந்தாலும், அது அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாகயிருக்கிறது. கர்த்தர் தன்னை எல்லா துன்பங்களிலிருந்தும், பாடுகளிலிருந்தும் நீங்கலாக்கிவிட்டார் என்று பவுல் சாட்சியாகச் சொல்லுகிறார்.

பவுலின் வார்த்தை நமக்கு உற்சாகத்தைக் கொடுப்பதற்காக எழுதப்பட்டிருக்கிறது. தீமோத்தேயுவுக்கும், நமக்கும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவருக்கும் துன்பங்களும் பாடுகளும் வரும். அப்போது நாம் சோர்ந்துபோகாமல், திடமனதாயிருந்து, துன்பங்களைச் சகித்துக் கொள்ளவேண்டும். இதற்கு பவுலின் வார்த்தைகள் நமக்கு உதவியாயிருக்கும்.

பொல்லாதவர் களுக்கும் எத்தர்களுக்கும் அழிவு வருமென்று பவுல் எச்சரிக்கிறார் (2தீமோ 3:13). நல்லவர்கள் தேவனுடைய கிருபையினால் மேலும் மேலும் செழிப்பார்கள். பொல்லாதவர்களும், எத்தர்களும், மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள். மோசம் போக்கு கிறவர்கள் மோசம்போகிறவர்களாவார்கள். இவர்கள் சாத்தானின் ஆளுகைக்குட் பட்டவர்கள். இவர்கள் தங்கள் அழிவை தாங்களாகவே தேடிக்கொள்கிறார்கள். இவர்களுக்கு நித்திய அழிவும், நித்திய கேடும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாக யிருப்பார்கள். துன்மார்க்கரோ கேட்டுக்கும் அழிவுக்கும் பங்குள்ளவர்களாக யிருப்பார்கள்.

தீமோத்தேயு பரிசுத்த வேதாகமத்திலிருந்து கற்றுக்கொண்ட சத்தியங்களைப்பற்றி பவுல் அவருக்கு நினைவுபடுத்துகிறார் (2தீமோ 3:14,15). நாம் சத்தியத்தை கற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது. நாம் கற்று நிச்சயித்துக்கொண்ட சத்தியங்களில் நிலைத்திருக்கவும் வேண்டும். நாம் நன்மையான காரியங்களைக் கற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. நன்மையில் தொடர்ந்திருக்கவேண்டும். முடிவுபரியந்தம் நன்மையில் நிலைத்திருக்கவேண்டும்.

தீமோத்தேயு தான் கற்று நிச்சயித்துக்கொண்ட சத்தியங்களில் நிலைத்திருக்கும்போது அவருக்கு மிகுந்த ஆசீர்வாதமும் பாதுகாப்பும் உண்டாகும். தீமோத்தேயுவுக்கு விரோதமாக சத்துரு ஏராளமான கண்ணிகளை வைத்திருக்கிறான். சத்தியம் தீமோத்தேயுவை கண்ணிகளிலிருந்து விடுவிக்கும். கள்ளப்போதகர்கள் துர்உபதேசங்களைப் போதிக்கிறார்கள். சத்தியம் தீமோத்தேயுவை கள்ளப் போதகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும்.

நாம் சத்தியத்தைக் கற்று, அதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். சத்தியத்தில் நிலைத்திருக்கவேண்டும். சத்தியத்தை இன்னாரிடத்திலிருந்து கற்றுக்கொண்டோம் என்பதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும். நாம் துன்மார்க்கரிடத்திலிருந்தோ, கள்ளப் போதகர்களிடத்திலிருந்தோ சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான் களிடத்திலிருந்து சத்தியத்தைக் கற்றுக்கொண்டோம். நமக்குக் கற்றுக்கொடுத்தவர்கள் சத்தியத்தின் வல்லமையை ருசிபார்த்து அநுபவித்தவர்கள். அவர்களுடைய ஜீவியமும் போதகமும் இசைந்திருக்கிறது. அப்படிப்பட்டவர்களிடத்திலிருந்தே நாம் சத்தியத்தைக் கற்றுக்கொண்டோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு வேதவாக்கியங்களே பெலமுள்ள அஸ்திபாரமாகயிருக்கிறது. நம்முடைய ஜீவியம் வேத வாக்கியங்களின்மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். பரிசுத்த வேதஎழுத்துக்கள் நம்மை கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்திற்கு நேராக வழிநடத்தும். நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கும். தீமோத்தேயு தன்னுடைய சிறுவயதுமுதல் பரிசுத்த வேதஎழுத்துக்களை அறிந்திருக்கிறார். சிறுவயதிலிருந்தே வேதவசனங்களை மனப்பாடம் செய்வதும், தியானம்பண்ணுவதும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

தேவனுடைய ஊழியங்களைச் செய்கிறவர்கள் வேதவாக்கியங்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும். சிறுவயதிலிருந்து வேதஎழுத்துக்களை அறிந்துகொள்வது மிகப்பெரிய ஆசீர்வாதம். சிறுபிள்ளைப் பிராயம் கற்றுக்கொள்கிற பிராயம். சிறுவயதில் நாம் அதிகமாகவும், தெளிவாகவும் கற்றுக்கொள்ளலாம். நம்முடைய மெய்யான கல்வி ஞானம், வேதஎழுத்துக்களை கற்றுக்கொள்வதின் மூலமாகவே நமக்குக் கிடைக்கிறது. வேதமே வெளிச்சம். தேவனை அறிகிற அறிவே மெய்யான ஞானம்.

நாம் கற்றுக்கொண்ட சத்திய வசனங்களை மறந்துவிடக்கூடாது. அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் புறக்கணித்துவிடக் கூடாது. வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். நமக்கு நன்மை வரும்போது மாத்திரம் வசனத்திற்குக் கீழ்ப்படிந்துவிட்டு, நமக்கு துன்பங்களும் பாடுகளும் வரும்போது வசனங்களை மறுதலித்துவிடக்கூடாது.

வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2தீமோ 3:16). தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் தங்கள் சுயமாய்ப் பேசவில்லை. தாங்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட வேதவசனங்களை நமக்குப் போதகம்பண்ணுகிறார்கள்.

தேவவசனத்தினால் நமக்கு அநேக பிரயோஜனமுண்டு. தேவனுடைய மனுஷன் தேறினவனாகயிருப்பதற்கு வேத வாக்கியங்கள். பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது. இவை நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்குப் பிரயோஜனமுள்ளவை. பரிசுத்த வேத எழுத்துக்கள் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தை நமக்குக் கொடுக்கிறது. இரட்சிப்புக்கேற்ற ஞானமே மெய்யான ஞானம். வேதவாக்கியத்தின் மூலமாய் நாம் இரட்சிப்புக்கேற்ற ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறோம். இந்த ஞானத்தோடு விசுவாசத்தைச் சேர்க்கும்போது நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது.

நாம் கற்றுக்கொண்ட வேத வாக்கியங்களை விசுவாசிக்கவேண்டும். விசுவாசமில்லையென்றால் வேத வாக்கியத்தினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. வேதவாக்கியங்களெல்லாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது. சத்தியத்தை நமக்குக் கற்றுத்தருகிறது. வேதவசனங்கள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.

தேவனுடைய மனுஷன் தேறினவனாயிருக்க வேண்டும். இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும் வரையிலும் வேதவாக்கியங்களே நம்மை தேறின மனுஷனாக ஆக்குகிறது. வேதவாக்கியங்கள் மூலமாகவே நாம் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம். வேதவாக்கியத்தின் மூலமாய் நமக்கு அநேக பிரயோஜனங்கள் உண்டு. வேதவசனங்கள் நம்முடைய குழப்பத்தைத் தீர்த்துவைத்து, நமக்குள் தெளிவை உண்டுபண்ணும். ஆவிக்குரிய காரியங்களைக் குறித்த எல்லா கேள்விகளுக்கும் வேதவாக்கியங்கள் நல்ல பதிலைத் தரும். நம்முடைய விசுவாசத்திற்கும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் வேதவாக்கியங்களே பரிபூரணமான சட்டங்கள். இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, நமக்கு இம்மையிலும் ஆசீர்வாதம் உண்டாகும். மறுமையில் ஆசீர்வாதம் உண்டாகும்.

தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆலோசனைகளை வேத வாக்கியங்களிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். வேதவாக்கியங்கள் நமக்கு கட்டளை கொடுக்கிற பிரகாரமாக நாம் ஜீவிக்கவேண்டும். அப்போது நாம் தேவனுடைய மனுஷராகயிருப்போம். தேறினவர்களாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவர்களாகவும் இருப்போம். வேதவாக்கியங்களையும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தையும் பிரிக்க முடியாது.

4 அதிகாரம்

தீமோத்தேயு சுவிசேஷகருடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். திருவசனத்தைப் பிரசங்கம்பண்ண வேண்டும். விசுவாசிகளுக்குப் புத்திசொல்லவேண்டும் (2தீமோ 4:1-5). அப்போஸ்தலர் பவுலுக்கு தன்னுடைய தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்திருக்கிறது (2தீமோ 4:6-8). பவுல் தன்னுடைய சிநேகிதர்களைப்பற்றி விரிவாக எழுதுகிறார் (2தீமோ 4:9-15). கர்த்தர் தனக்கு துணைநின்றதை பவுல் சாட்சியாகச் சொல்லுகிறார் (2தீமோ 4:16-18). முடிவுரையும் அப்போஸ்தல ஆசீர்வாதமும் (2தீமோ 4:19-22).

இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக கட்டளையிடுகிறதாவது 2தீமோ 4 : 1-5

2தீமோ 4:1. நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயத்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:

2தீமோ 4:2. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.

2தீமோ 4:3. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,

2தீமோ 4:4. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.

2தீமோ 4:5. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்கு தன்னுடைய புத்திமதிகளைக் கட்டளையிட்டுச் சொல்லுகிறார். ஒருவர் தன்னுடைய கடமைகளை எவ்வளவு நன்றாக நிறைவேற்றினாலும், அவர் தன்னுடைய கடமைகளை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு, அவருக்கு ஆலோசனை தேவைப்படுகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர் ஒவ்வொருவரும், தங்களுக்கு தேவன் ஒப்புவித்திருக்கிற ஊழியத்தை உண்மையாயும், கருத்தாயும் செய்யவேண்டும். தேவனுடைய கண்கள் தம்முடைய ஊழியக்காரர்மீது எப்போதும் நோக்கமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவுக்குக் கட்டளையிடும்போது, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக" அவருக்குக் கட்டளையிடுகிறார். இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து பவுல் கட்டளையிடுகிறார். நியாயத்தீர்ப்பு நாளின்போது கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருமே, கர்த்தர் தங்களுக்கு ஒப்புவித்திருக்கிற ஊழியத்தைக் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நியாயத்தீர்ப்பு நாள் வரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தீமோத்தேயு அந்த நாளை நினைவில் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக, இயேசு கிறிஸ்துவினுடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து பவுல் அவருக்குக் கட்டளையிடுகிறார்.

இயேசுகிறிஸ்து பிரசன்னமாவார். அவருடைய இரண்டாம் வருகை சீக்கிரத்திலிருக்கும். அவருடைய பிரசன்னமாகுதல் மகிமை நிரம்பியதாகயிருக்கும். அப்போது தேவனுடைய ராஜ்யம் அவருடைய மகிமையில் வெளிப்படும். இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் வெளிப்படுவார். பவுல் இதையெல்லாம் நினைவுகூர்ந்து, தீமோத்தேயுவுக்குக் கட்டளையிடுகிறார். தம்முடைய கட்டளைக்கு இயேசு கிறிஸ்துவினுடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறார் (2தீமோ 4:1).

பவுல் தீமோத்தேயுவுக்கு கொடுக்கிற கட்டளையின் விவரம் வருமாறு :

1. தீமோத்தேயு திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும் (2தீமோ 4:2). திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணுவது ஊழியக்காரருடைய கடமை. தங்களுடைய சொந்தக் கருத்துக்களையோ, சொந்தத் தத்துவங்களையோ, சொந்த உபதேசங்களையோ ஊழியக்காரர்கள் பிரசங்கம்பண்ணக்கூடாது. தேவனுடைய திருவசனத்தை, கலப்பில்லாமல் சுத்தமாக பிரசங்கம்பண்ணவேண்டும்.

2. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் தீமோத்தேயு திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும். எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டும். சில சமயங்களில் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு அநுகூலமான வாசல் திறந்திருக்கும். வேறு சில சமயங்களில் வாசல் அடைக்கப்பட்டிருக்கும்.

அநுகூலமான வாசல் திறந்திருக்கும்போது, அந்த வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்தி, திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும். சமயம் வாய்க்காவிட்டாலும், திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணுவதை நிறுத்திவிடக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் எல்லா சூழ்நிலையிலும் கிரியை நடப்பிப்பதற்கு வல்லவராகயிருக்கிறார்.

3. தன்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களிடம், தீமோத்தேயு அவர்களுடைய தப்பிதங்களை எடுத்துச்சொல்ல வேண்டும். அவர்களோடு தெளிவாகப் பேசவேண்டும். அவர்கள் மனந்திரும்பவேண்டும் என்பதே தீமோத்தேயுவின் விருப்பமாயிருக்க வேண்டும். தேவைப்படும்போது அவர்களை கண்டனம்பண்ணலாம், கடிந்துகொள்ளலாம்.

4. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சி பெறவேண்டும். தீமோத்தேயு அவர்களை வழிநடத்த வேண்டும். உற்சாகப்படுத்தவேண்டும். எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் அவர்களுக்குப் புத்திசொல்ல வேண்டும். ஊழியக்காரர்களுக்கு நீடிய பொறுமை தேவை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மீது நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். இரட்சிக்கப்படாத ஜனங்கள்மீதும் அவர் நீடிய பொறுமையுள்ளவராகவே இருக்கிறார். நம்முடைய கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராகயிருக்கும் போது, நாம் அவசரப்படக்கூடாது.

நாம் நீடிய சாந்தமுள்ளவர்களாக உபதேசம்பண்ணினாலும், விசுவாசிகள் செய்கிற தப்பிதங்களை கண்டும் காணாதவர்போல் இருந்துவிடக்கூடாது. அவர்களை கண்டனம்பண்ணவேண்டும். கடிந்துகொள்ளவேண்டும். நம்முடைய கடினவார்த்தைகளினால் அவர்களை கடிந்துகொள்ளக் கூடாது. உபதேசத்தினால் அவர்களை கண்டனம்பண்ணி கடிந்துகொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை ஜனங்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது நம்முடைய ஜீவியம் பரிசுத்தமாகும். நாம் தீமையைவிட்டு விலகுவோம். நன்மையைப் பற்றிக்கொள்வோம். நம்முடைய ஜீவியத்தில் ஆவியின்கனி வெளிப்படும்.

5. தீமோத்தேயு எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவராயிருக்க வேண்டும் (2தீமோ 4:5). கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தில் தீமோத்தேயு கவனம் செலுத்தவேண்டும். ஜாக்கிரதையுள்ளவராயிருக்க வேண்டும். சாத்தானுடைய சோதனைகளுக்கு எதிராக தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். தன்னைக் காத்துக்கொள்வது மாத்திரமல்ல, கர்த்தர் தன்னிடத்தில் பொறுப்பாய் ஒப்புக்கொடுத்திருக்கிற ஆத்துமாக்களும் அழிந்துபோகாதவாறு அவர்களைக் காத்துக்கொள்ளவேண்டும்.

6. தீமோத்தேயு தீங்கு அநுபவிக்கவேண்டும் (2தீமோ 4:5). தீமைகளைச் சகித்துக்கொள்ளவேண்டும். நீடிய பொறுமையோடு பாடுகளை அநுபவிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு பாடுகளும் உபத்திரவங்களும் வரும். அவற்றை விசுவாசத்தோடும், நீடிய பொறுமையோடும் தாங்கிக்கொள்ளவேண்டும்.

7. கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை தீமோத்தேயு மறந்துவிடக்கூடாது. சுவிசேஷகருடைய வேலையைச் செய்யவேண்டும். தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். அப்போஸ்தலருக்கு உதவிக்காரராயிருந்து ஊழியம் செய்வது சுவிசேஷகருடைய ஊழியம். அப்போஸ்தலர்கள் நட்டியிருக்கிற சபைகளுக்கு சுவிசேஷகர்கள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இதுவே தீமோத்தேயுவின் ஊழியம்.

8. தீமோத்தேயு தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும் (2தீமோ 4:5). தன்னுடைய ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியையும் தீமோத்தேயு பொறுப்பாய்ச் செய்யவேண்டும். கவனமாயும், விவேகமாயும், ஞானமாயும் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோருமே, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். ஊழியத்தை பாதியில் அறைகுறையாக விட்டுவிடக்கூடாது.

ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். ஊழியத்தில் நமக்குப் பிடித்தமான பகுதியை மாத்திரம் செய்துவிட்டு, கடினமான பகுதியை கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. ஊழியத்தின் எல்லா பகுதியையும் செய்து முடிக்கும்போதுதான், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியம் நிறைவடையும்.

சபைக்குள்ளே கள்ளப்போதகர்கள் வந்து துர்உபதேசத்தைப் போதிக்கிறார்கள். இதனால் விசுவாசிகளில் சிலர் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமலிருக்கிறார்கள். செவித்தினவுள்ளவர்களாயிருக்கிறார்கள். துர்உபதேசம் சபைக்குள்ளே வேகமாக பரவுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தீமோத்தேயு தனக்குக் கிடைத்திருக்கிற காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சபையிலுள்ள விசுவாசிகள் ஆரம்பத்தில் கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்தை நம்பினார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக யிருந்தார்கள். ஆனால் அதன்பின்பு அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்வு உண்டாயிற்று. கள்ளப்போதகர்களின் துர்உபதேசத்தினால் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய நோய் உண்டாயிற்று. நோய் வாய்ப்பட்டவர்களால் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க முடியவில்லை. தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாய்ச் சேர்த்துக்கொள்கிறார்கள்.

கள்ளப்போதகர்களை கர்த்தர் அனுப்புவதில்லை. விசுவாசிகளே தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற கள்ளப் போதகர்களை தங்களுக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள். கள்ளப்போதகர்களுக்குப் பஞ்சமில்லை. அவர்கள் எண்ணிக்கையில் திரளாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் தெளிவாயிருக்கிறது. சுவிசேஷத்தின் உபதேசம் ஆரோக்கியமானது. ஆரோக்கியமான உபதேசத்தை விசுவாசிகள் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆசீர்வாதமுண்டாகும்.

கள்ளப் போதகர்கள் கட்டுக்கதைகளைச் சொல்லுகிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கும் கள்ளப் போதகர்களின் கட்டுக்கதைகளுக்கும் வித்தியாசமுண்டு. தேவனுடைய வார்த்தை ஆரோக்கியமான உபதேசம். கள்ளப்போதகர்களின் வார்த்தை கட்டுக்கதைகள். விசுவாசிகளோ சத்தியத்திற்கு செவியை விலகி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துபோகிறார்கள் (2தீமோ 4:3,4).

அப்படிப்பட்ட காலம் இப்போது வந்திருக்கிறது. ஆகையினால் தீமோத்தேயு சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணவேண்டும். எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு, அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டும்.

ஓட்டத்தை முடித்தேன்
2தீமோ 4 : 6-8

2தீமோ 4:6. ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.

2தீமோ 4:7. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

2தீமோ 4:8. இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

அப்போஸ்தலர் பவுல் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் முடிவுக்கு வருகிறது. அவர் தன்னுடைய ஊழியத்தை முடித்துவிட்டார். விசுவாசத்தையும் காத்துக்கொண்டார். இதைப்பற்றிச் சொல்லும்போது, "நான் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன்" (2தீமோ 4:6,7) என்று சொல்லுகிறார். அப்போஸ்தலர் பவுல் மரிக்கும் வேளை நெருங்கி வந்திருக்கிறது. தான் செய்கிற ஊழியத்தை பவுல் தீமோத்தேயுவிடம் ஒப்புவித்திருக்கிறார். தீமோத்தேயு அதிக உற்சாகமாக, சோர்வில்லாமல் கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும்.

தீமோத்தேயுவுக்கு அதிக ஊழிய வாய்ப்புக்கள் உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர் களெல்லோருமே அவருடைய தோட்டத்தில் வேலைசெய்கிற ஊழியக்காரர்கள். ஊழியக்காரர்களில் ஒருவர் மரித்துப்போகும்போது, அவர் செய்து வந்த ஊழியத்தை, மற்ற ஊழியக்காரர்கள் பொறுப்பேற்று நிறைவேற்றவேண்டும். நம்முடைய கரங்கள் சுறுசுறுப்பாய் வேலை செய்யவேண்டும்.

நம் மத்தியிலே இதுவரையிலும் சுறுசுறுப்பாய் வேலை செய்த ஒருவர் மரிக்க நேரிடும்போது, நம்முடைய வேலையில் குறைவுண்டாகாதவாறு, மரித்துப்போனவருடைய வேலையையும் நமக்குள் பகிர்ந்துகொள்ளவேண்டும். தீமோத்தேயுவுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை வந்திருக்கிறது. பவுல் சீக்கிரத்தில் மரித்துப்போகப்போகிறார். தீமோத்தேயு பவுலின் ஊழியத்தையும் நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் தன்னிடத்தில் ஒப்புவித்த ஊழியத்தை, பவுல் தன்னுடைய காலத்தில் நிறைவேற்றியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. ஒவ்வொரு ஊழியக்காரரும் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை, அவர்களுடைய காலத்தில் நிறைவேற்றவேண்டும். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். பவுலைப்போல நாமும், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்று நாம் மரிக்கும்போது சந்தோஷமாய்ச் சொல்லவேண்டும்.

அப்போஸ்தலர் பவுலுக்கு அவருடைய தேகத்தை விட்டுப் பிரிகிற காலம் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர் மிகுந்த ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார். தான் கடந்துவந்த ஊழியப்பாதை தீமோத்தேயுவுக்கு உற்சாகம் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறார். பவுலின் ஊழியத்தில் அநேக போராட்டங்கள் வந்தது. தான் மரிக்கும்போது பவுல் அந்தப் போராட்டங்களையெல்லாம் நினைத்துப் பார்க்கிறார். நல்ல போராட்டத்தைப் போராடினேன் என்று சாட்சியாகச் சொல்லுகிறார். எல்லா போராட்டத்திலும் பவுலுக்குத் திருப்தி உண்டாயிற்று.

எந்தப் போராட்டத்திலும் பவுல் பயப்படவில்லை. சோர்ந்துபோய் விடவில்லை. அவருக்கு ஒவ்வொரு போராட்டத்திலும் பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. அவற்றை எதிர்கொள்ள பவுல் பயப்படவில்லை. எல்லா பாடுகளையும் பொறுமையோடு சகித்துக்கொண்டார். நல்ல போராட்டத்தைப் போராடினார். நீதியின் கிரீடம் பவுலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது (2தீமோ 4:8).

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்று பவுல் தன்னுடைய பழைய அனுபவத்தைப் பின்னோக்கிப் பார்த்துச் சொல்லுகிறார். இப்போதோ இனிமேல் வரப்போகிற காரியத்தை முன்னோக்கிப் பார்க்கிறார். பவுலுக்கு சீக்கிரத்தில் மரணம் வரப்போகிறது. அதைப்பற்றிச் சொல்லும்போது, "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்" (2தீமோ 4:6) என்று சொல்லுகிறார்.

பவுல் தன்னுடைய மரணத்தைப்பற்றி சந்தோஷமாகப் பேசுகிறார். தன்னுடைய சரீரமரணத்தை, "தன் தேகத்தைவிட்டுப் பிரியுங்காலம்" (2தீமோ 4:6) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பரலோகமே நித்திய வாசஸ்தலம். நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரைக்கும் நமக்கு பாடுகளும், வேதனைகளும், போராட்டங்களும் உண்டு. நாம் மரிக்கும்போது இப்பிரபஞ்சத்தின் பாடுகள் எல்லாவற்றிலிருந்தும் விடுதலை பெறுகிறோம்.

கர்த்தர் நமக்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியிருக்கிறார். நம்முடைய சரீர மரணத்திற்குப் பின்பு நமக்கு பரலோகத்தில் பிரவேசிக்கிற சிலாக்கியமுண்டாகும். இதை நினைவுகூர்ந்து கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் தங்கள் தேகத்தைவிட்டுப் பிரியும் காலத்தில் சந்தோஷமாயிருக்க வேண்டும். பரலோகத்திலே நமக்கு நித்திய மகிழ்ச்சி உண்டாயிருக்கும்.

நாம் மரிக்கும்போது நம்முடைய ஜீவன் நம்முடைய தேகத்தைவிட்டுப் பிரிகிறது. ஜீவன் ஒருபோதும் மரிப்பதில்லை. இப்பிரபஞ்சத்தின் ஜீவன் முடிவுபெறும்போது நாம் நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்கிறோம். நம்முடைய ஜீவன் ஒரு உலகத்திலிருந்து மற்றொரு உலகத்திற்குக் கடந்துசெல்கிறது. இப்பிரபஞ்சத்திலிருந்து பரலோகத்திற்குக் கடந்துசெல்கிறது. பரலோகத்தில் நமக்கு மரணமில்லை. அங்கு நமக்கு நித்திய ஜீவன் உண்டு.

இப்பிரபஞ்சத்தில் ஜீவித்த நாட்களை பவுல் சந்தோஷமாய் நினைவுகூருகிறார். அவர் மரணத்தைப் பார்த்து பயப்படவில்லை. பவுலின் மனச்சாட்சி அவருடைய உலக ஜீவயத்தைப்பற்றி நன்றாய்ச் சாட்சி சொல்லுகிறது. தேவனுடைய கிருபை அவரோடு கூடயிருந்தது. பவுலின் ஜீவியகாலத்தில் அவருக்கு பல போராட்டங்கள் உண்டாயிற்று. எல்லா போராட்டங்களிலும் அவர் நல்ல போராட்டத்தைப் போராடினார். அவருடைய ஜீவியகாலம் அவருக்கு ஒரு சகாப்தம் போல இருந்தது. அந்த சகாப்தம் இப்போது நிறைவு பெற்று முடிவுக்கு வந்திருக்கிறது. அவர் இதுவரையிலும் போராடிய போராட்டம் முடிவு பெறுகிறது. தன் ஜீவியகாலம் முழுவதும் பவுல் தன் ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தார். தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தபோதோ பவுல் தன் ஓட்டத்தை ஓடி முடித்திருக்கிறார்.

தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை பவுல் சாட்சியாகச் சொல்லுகிறார். "விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறார். நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றால் நாமும் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தை ஓடி முடிக்கவேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். நம்முடைய ஜீவியகாலத்தின் முடிவில் நாமும் பவுலைப்போல ஆறுதலாகவும், சமாதானமாகவும், சந்தோஷமாகவும் "விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்யவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இதுவரையிலும் ஜீவித்த தன்னுடைய உலக ஜீவியத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு, இப்போது இனிமேல் ஜீவிக்கப்போகிற பரலோக ஜீவியத்தை விசுவாசத்தோடு நோக்கிப்பார்க்கிறார். தீமோத்தேயு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது அவருக்கு பல போராட்டங்கள் வரும். அவர் இயேசுகிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகராக போராடவேண்டும். பாடுகளை அனுபவிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்பிரபஞ்சத்தில் நமக்குப் பாடுகள் இருந்தாலும், பரலோகத்தில் ஜீவகிரீடம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் இந்தக் கிரீடத்தை "நீதியின் கிரீடம்" (2தீமோ 4:8) என்று சொல்லுகிறார். பரலோகத்தில் நம்முடைய பரிசுத்தமும் நீதியும் பரிபூரணமடையும். நம்முடைய பரிபூரணமான பரிசுத்தமும் நீதியும் பரலோகத்திலே நமக்குக் கிரீடமாகயிருக்கும். நீதியின் கிரீடம் பவுலுக்கு மாத்திரம் கிடைக்குமென்றோ, அல்லது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் கிடைக்குமென்றோ, அல்லது இரத்தச்சாட்சியாக மரித்த பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் கிடைக்குமென்றோ நாம் நினைக்கக்கூடாது. கர்த்தருடைய பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும், கர்த்தர் நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார். இந்த விசுவாசம் கர்த்தருடைய பிள்ளைகளெல்லோருடைய இருதயத்திலும் ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டும்.

தன்னுடைய கிரீடத்தை நோக்கிப் பார்த்து, "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்றும், "நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" என்றும் பவுல் விசுவாசத்தோடு சொல்லுகிறார். தனக்கு மாத்திரமல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அவர் அதைத் தந்தருளுவார் என்று சொல்லி, பவுல் நம் எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விரும்பவேண்டும். அவருடைய வருகைக்காக வாஞ்சையோடு காத்திருக்கவேண்டும்.

கர்த்தர் விசுவாசிகளுக்கு நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார். இந்தக் கிரீடம் நமக்காக இப்போது பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் கர்த்தர் நமக்கு நீதியின் கிரீடத்தை தந்தருளுமாட்டார். நாம் இப்போது கர்த்தருடைய சுதந்தரவாளிகளாகயிருக் கிறோம். இந்தச் சுதந்தரத்தை நாம் பரலோகத்தில்தான் சுதந்தரித்துக் கொள்வோம். அப்போது கர்த்தர் நமக்கு நிச்சயமாகவே நீதியின் கிரீடத்தைத் தந்தருளுவார்.

சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு 2தீமோ 4 : 9-15

2தீமோ 4:9. நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு.

2தீமோ 4:10. ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்.

2தீமோ 4:11. லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்.

2தீமோ 4:12. தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன்.

2தீமோ 4:13. துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா.

2தீமோ 4:14. கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக.

2தீமோ 4:15. நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்.

தீமோத்தேயு தன்னிடத்தில் சீக்கிரமாய் வரவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். பவுலுக்கு தீமோத்தேயுவின் ஐக்கியமும் உதவியும் தேவைப்படுகிறது. பவுலுடைய உடன் ஊழியரில் அநேகர் அவரை விட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள் (2தீமோ 4:10). தேமா இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்து பவுலைவிட்டு தெசலோனிக்கே பட்டணத்திற்குப் போய்விட்டான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைக்கக்கூடாது. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைக்கிறவர்கள் சுவிசேஷத்தின் சத்தியங்களை விட்டும், இயேசுகிறிஸ்துவின் வழிகளைவிட்டும் விலகிப் பிரிந்துபோய்விடுவார்கள்.

கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்குப் போய்விட்டான். தீத்து தல்மாத்தியா நாட்டிற்குப் போய்விட்டான். இவ்விரண்டு பேரும் பவுலைவிட்டுப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் போய்விட்டார்கள். லூக்கா மாத்திரம் பவுலோடு கூடயிருக்கிறார் (2தீமோ 4:11).

அப்போஸ்தலர் பவுல் இப்போது மாற்குவைப்பற்றி நல்ல வார்த்தைகளினால் புகழ்ந்துபேசுகிறார். தன்னுடைய ஊழியத்தில் மாற்கு பிரயோஜனமுள்ளவன் என்று சொல்லுகிறார். இதற்குமுன்பு, மாற்குவினிமித்தமாய் பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. இதனால் இவ்விருவரும் வெவ்வேறு ஊழியப்பாதையில் பிரிந்து சென்றார்கள்.

"சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான். அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானைக்கூட அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்றான். பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வாராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டானபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்" (அப் 15:36-41).

பவுல் மாற்குவை தங்களோடு அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்று பிடிவாதமாயிருந்தார். ஆனால் இப்போதோ "ஊழியத்தில் மாற்கு தனக்குப் பிரயோஜனமுள்ளவன்" என்று எழுதுகிறார். ஒருவேளை இடைப்பட்ட இந்தக் காலத்தில் பவுல் மாற்குவோடு ஒப்புரவாகியிருந்திருக்கவேண்டும்.

நம்முடைய ஊழிய அனுபவித்திலே ஒரு சில ஊழியக்காரரோடு நமக்கு கருத்து வேறுபாடு உண்டாகலாம். நமக்கு உதவியாயிருந்த ஒரு சில ஊழியக்காரர்களைவிட்டு நாம் பிரிந்து வந்திருக்கலாம். ஆனாலும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மத்தியிலே நிரந்தமான பிரிவு இருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு சமாதானம் சொல்லுகிற நாம், முதலாவது சமாதானம் பெற்றுக்கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடுகளைப் பேசி தீர்த்து ஒப்புரவாகவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இணைந்து ஊழியம் செய்யவேண்டும். இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க, அவருடைய ஊழியக்காரர் களெல்லோரும் ஒற்றுமையைக் கிரியை நடப்பிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் துரோவா பட்டணத்திலிருந்தபோது, கார்ப்பு என்பவன் வசத்தில் தன்னுடைய மேலங்கியையும், புஸ்தகங்களையும், தோற்சுருள்களையும் கொடுத்து வைத்திருந்தார். தீமோத்தேயு தன்னிடத்தில் வரும்போது அவற்றை எடுத்துக்கொண்டு வருமாறு சொல்லுகிறார் (2தீமோ 4:13). பவுல் இப்போது சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார். குளிர் அதிகமாகயிருக்கிறது. குளிருக்கு அவருடைய மேலங்கி மிகவும் பிரயோஜனமுள்ளதாகயிருக்கும்.

சிறைச்சாலையிலிருக்கும் போது வேதவாக்கியங்களைத் தியானிப்பதற்கு பவுலுக்கு அதிக நேரம் கிடைத்திருக்கிறது. தன்னுடைய நேரத்தை பவுல் பிரயோஜனப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். இதற்காக புஸ்தகங்களையும், விசேஷமாய் தோற்சுருள்களையும் எடுத்துக்கொண்டு வருமாறு சொல்லுகிறார். பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொன்னபோது, அவர் வேதவாக்கியங்களைத் தியானிக்க வேண்டுமென்று புத்திசொன்னார். தீமோத்தேயுவுக்குப் புத்திசொன்னது போலவே பவுலும் வேதவாக்கியங்களைத் தியானிக்க வாஞ்சையாயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தில் அலெக்சந்தர் என்பவனைப் பற்றி எழுதுகிறார். இவன் ஒரு கன்னான். இவன் பவுலுக்கு வெகுதீமை செய்தான் (2தீமோ 4:14,15). அவனுடைய செய்கைக்குத்தக்கதாக கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்று பவுல் அவனுக்கு வரப்போகிற நியாயத்தீர்ப்பை முன்னறிவித்துச் சொல்லுகிறார். தீமோத்தேயுவும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிருக்குமாறு, பவுல் அவருக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

ஒரு காலத்தில் பவுலின் பிரசங்கத்தை சிலர் விரும்பி கேட்டார்கள். பவுல் மூலமாய் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள். இப்போது அவர்களில் அநேகர் பவுலை மறந்துவிட்டார்கள். அவருடைய பிரசங்கத்தை மறந்துவிட்டார்கள். பவுல்மீதும், அவர் பிரசங்கம்பண்ணுகிற சுவிசேஷத்தின்மீதும் பிரியம் வைப்பதற்குப் பதிலாக, இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்திருக்கிறார்கள். இவர்களில் அநேகர் பவுலைவிட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள்.

கன்னானாகிய அலெக்சந்தரோ, பவுலைவிட்டுப் பிரிந்துபோகாமல், பவுலுக்கு எதிர்த்து நின்று, அவருக்கு வெகுதீமை செய்கிறான். தங்களுடைய சுவிசேஷ பிரசங்கத்திற்கு அவன் மிகவும் எதிர்த்து நின்றவன் என்று பவுல் சொல்லுகிறார்.

ஒரு சிலர் பவுலுக்குத் தீமை செய்தாலும், வேறு சிலர் அவருக்கு அநேக நன்மைகளையும் செய்கிறார்கள். அவர்கள் செய்த நன்மைகளையும் பவுல் சந்தோஷமாகக் குறிப்பிடுகிறார். தனக்கு சிலர் தீமை செய்தாலும், தனக்கு நன்மை செய்தவர்களை பவுல் நினைவுகூர மறப்பதில்லை. அவர்கள் செய்த நன்மையையும் நினைவுகூர்ந்து கர்த்தரைத் துதிக்கிறார்.

முடிவுரை
2தீமோ 4 : 16-22

2தீமோ 4:16. நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லோரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.

2தீமோ 4:17. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.

2தீமோ 4:18. கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

2தீமோ 4:19. பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு.

2தீமோ 4:20. எரஸ்து கொரிந்து பட்டணத்தில் இருந்துவிட்டான்; துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்.

2தீமோ 4:21. மாரிகாலத்துக்குமுன் நீ வந்துசேரும்படி ஜாக்கிரதைப்படு.

ஐபூலுவும், புதேஞ்சும், லீனுவும், கலவுதியாளும், மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

2தீமோ 4:22. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

தன்னுடைய தற்போதைய சூழ்நிலைகளைப் பற்றி பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். சமீபத்தில் இராயனுக்கு முன்பாக பவுல் நிற்கவேண்டியதாயிற்று (2தீமோ 4:16). பவுல் ரோமாபுரிக்கு கட்டப்பட்டவராக வந்தபோது யூதர்களில் அநேகர் அவரைச் சந்திப்பதற்கு வந்தார்கள் (அப் 28). ஆனால் இப்போதோ, பவுல் இராயனுக்கு முன்பாக உத்தரவு சொல்ல நிற்கையில், ஒருவனும் அவரோடு கூடயிருக்கவில்லை. எல்லோரும் பவுலை கைவிட்டுவிட்டார்கள். ஒருவேளை பவுலோடு கூடயிருந்தால் தங்களுக்கும் உபத்திரவம் வருமென்று அவர்கள் பயந்திருக்கலாம். பயத்தினிமித்தமாய் அவர்களெல்லோரும் பவுலை கைவிட்டுவிட்டு விலகிப்போயிருக்கலாம்.

இராயனுக்கு முன்பாக விசாரிக்கப் படும்போது பவுலுக்கு தன்னுடைய சிநேகிதரின் உதவி தேவைப்படுகிறது. உதவி தேவைப்படுகிற வேளையில்தான் அவருடைய சிநேகிதர்கள் அவரைக் கைவிட்டுவிடுகிறார்கள். அவருக்கு ஆபத்து உண்டாகும்போது தான் அவரை விட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். சத்துருக்கள் பவுலுக்கு விரோதமாக தீங்கு செய்யும் போதுதான், அவருடைய சிநேகிதர்கள் அவரை கைவிட்டு விடுகிறார்கள். இதினிமித்தமாய் கர்த்தர் ஒருவேளை அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கலாம். தன்னுடைய சிநேகிதர்கள் தன்னைக் கைவிட்டு விட்டாலும், பவுல் அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். தன்னுடைய கரிசனையை அவர்களுக்குக் காண்பிக்கிறார். தன்னை கைவிட்டுவிட்ட குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக என்று அவர்களுக்காக தேவனிடத்தில் விண்ணப்பண்ணுகிறார்.

எல்லோரும் பவுலை கைவிட்டுவிட்டாலும் கர்த்தர் அவரை கைவிடவில்லை. கர்த்தர் அவருக்குத் துணையாக நிற்கிறார் (2தீமோ 4:17). பவுலின் முகத்தைப் பிரகாசிக்கச் செய்கிறார். பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாகப் பிரசங்கம் பண்ணுகிறவர். அவருக்கு பிரசங்க மேடையிலிருந்து பிரசங்கம்பண்ணவும் தெரியும். சிறைச்சாலையின் கம்பிகளுக்குப் பின்னால் நின்று பிரசங்கம்பண்ணவும் அவருக்குத் தெரியும் (2தீமோ 4:17). புறஜாதியாரெல்லாரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கவேண்டும். அதற்காக சிறைச்சாலையிலேயே தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பவுலைப் பலப்படுத்துகிறார்.

அப்போஸ்தலர் பவுல் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப் பட்டிருந்ததினால், சிறைச்சாலையிலுள்ள வர்களுக்கும், அரமனையிலுள்ள வர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கும்சிலாக்கியம் உண்டாயிற்று. பவுல் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கவில்லையென்றால், ரோமப் பேரரசருக்கும், ரோமப்பேரரசிலுள்ள மிகஉயர்ந்த பதவிலுள்ள அதிகாரிகளுக்கும் சுவிசேஷத்தைக் கேட்கிற வாய்ப்பு கிடைத்திருக்காது. புறஜாதியாரெல்லோரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு கர்த்தர் தாமே பவுலை பலப்படுத்துகிறார். பவுல் மூலமாய் சுவிசேஷப் பிரசங்கம் நிறைவேறுவதற்கு கர்த்தர் அவரைப் பலப்படுத்துகிறார். சிங்கத்தின் வாயிலிருந்தும் தான் இரட்சிக்கப்பட்டதாக பவுல் சொல்லுகிறார்.

பவுல் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையிலிருந்தாலும், கர்த்தர் பவுலை எல்லாத் தீமையினின்றும் இரட்சிக்கிறார். தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி கர்த்தர்தாமே தம்மைக் காப்பாற்றுவாரென்று பவுல் விசுவாசத்தோடு சொல்லுகிறார். நம்முடைய கர்த்தர் நமக்குத் துணையாக நிற்கும்போது, அவர் எல்லாத் தீமையினின்றும் நம்மை இரட்சிப்பார். தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்கு நம்மைப் பெலப்படுத்துவார். எல்லோரும் நம்மை கைவிட்டுவிட்டாலும், கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும்.

கர்த்தர் நம்மை இதுவரையிலும் பாதுகாத்து வழிநடத்தி வந்திருக்கிறார். இதுவரையிலும் பாதுகாத்தவர் இனிமேலும் பாதுகாத்துக்கொள்வார். பழைய அனுபவங்கள் நமக்கு வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கையைக் கொடுக்கிறது. எக்காலத்திலும் கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பதற்கு நம்முடைய பழைய அனுபவம் நமக்கு உதவிசெய்கிறது. கடந்தகாலத்திலும், தற்காலத்திலும், இனிமேல் வரப்போகிற காலத்திலும், கர்த்தர் நமக்குத் துணையாக நிற்பதற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ண வேண்டும். எல்லாத் தீமையினின்றும் அவர் நம்மை இரட்சிப்பதற்காகவும் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். "அவருக்கு சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (2தீமோ 4:18) என்று சொல்லி கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தின் முடிவுரையாக ஒரு சிலருக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார். துரோப்பீமு மிலேத்துவிலே வியாதிப்பட்டவனாகயிருக் கிறான். பவுல் அவனை வியாதிப் பட்டவனாக விட்டு வந்திருக்கிறார். எரஸ்து கொரிந்து பட்டணத்திலிருக்கிறான் என்று தன்னுடைய சிநேகிதர்களைப்பற்றி பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லுகிறார் (2தீமோ 4:20).

பிரிஸ்காளுக்கும், ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் தன் வாழ்த்துதலைச் சொல்லுமாறு பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அதே வேளையில் மாரிக்காலத்திற்கு முன் தீமோத்தேயு தன்னிடத்தில் வந்துசேரும் படியும் அவரைத் துரிதப்படுத்துகிறது. பவுலுக்கு தீமோத்தேயுவின் ஐக்கியமும் உதவியும் தேவைப்படுகிறது.

தீமோத்தேயுவுக்கு வாழ்த்துதல் சொல்லும்போது ஐபுலு, புதேஞ்சு, லீனு, கலவுதியாள் ஆகியோரும், மேலும் மற்றெல்லா சகோதரரும் தீமோத்தேயுவுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் (2தீமோ 4:21).

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை ஜெபத்தோடு நிறைவு செய்கிறார். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனே கூடயிருப்பாராக" என்று சொல்லி அவர்களுக்காக ஜெபிக்கிறார். நம்முடைய ஆவியோடு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூடயிருக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான சந்தோஷம். இதுவே நமக்கு விசேஷித்த ஆசீர்வாதம். நம்முடைய சிநேகிதர்களுக்காக நாம் இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும்.

"கிருபை உங்களோடிருப்பதாக" என்று பவுல் வாழ்த்துவதைப் போல நாமும் வாழ்த்தவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கிருபை நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மனந்திரும்ப வைத்திருக்கிறது. நம்முடைய பழைய பாவசுபாவங்களிலிருந்து நம்மை இரட்சித்திருக்கிறது. நமக்குப் பரிசுத்தமான புதிய சுபாவங்களைக் கொடுத்திருக்கிறது. நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது. தேவகிருபை நம்மைப் பெருமைப்படவிடாமல் தாழ்த்துகிறது. தேவகிருபையினாலே நாம் விசுவாசத்தை விட்டுவிடாமல் முடிவுபரியந்தம் காத்துக்கொள்கிறோம். தேவகிருபையே முடிவில் நமக்கு நீதியின் கிரீடத்தைத் தருகிறது. அப்படிப்பட்ட தேவகிருபை நம்மோடு கூடயிருப்பதாக. ஆமென் என்று வாழ்த்தி பவுல் இந்த நிருபத்தை நிறைவுசெய்கிறார்.